




# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

**1879 -1916** ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 5. இதழ் - 4. ஜுலை-ஆகஸ்ட் 2019

**R5789**

**(R4777)**

## Too Much money - Further Offerings Refused

## அதிகப்படியான பணம் - அதற்கும் மேலாக காணிக்கைகள் மறுக்கப்பட்டன

*"மனமுவந்து கொடுக்கக் கூடிய காணிக்கைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது ஒரு பாடம்- பொறுப்பாளர் இல்லாத கஜானா பொக்கிஷதாரர்கள்." 2 ராஜாக்கள் 12:1-16*

*"இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்." 1 நாளாகமம் 29:9*

நாம் முந்தைய பாடத்தில் பார்த்த நிகழ்வுகளுக்கு பிறகு பதினாறு வருடங்கள் கடந்துவிட்டன. யோவாஸ் ராஜா இருபத்தி மூன்று வயதுடைவராயிருந்தான். பழுதாயிருந்த ஆலயத்தை பழுது பார்க்கும்படி ஆசாரியர்களுக்கு அவன் ஏற்கனவே கட்டளையிட்டிருந்தான். ஏனெனில் ஜனங்கள் முழுமனதோடு யேகோவாவை தொழுதுகொள்ளவில்லை. சுற்றியிருந்த ஜாதிகளின் விக்கிரக ஆராதனை இன்னும் அவர்களை பற்றியிருந்தது. இன்னும் ஜனங்கள் பாகால்களின் மேடைகள் மேல் தூபங்காட்டி வந்தார்கள்.

### ஆசாரியர்கள் அற்பமான வேலையாட்கள்

யோவாஸ் ராஜா, ஆசாரியர்களிடம் ஆலயத்தை பழுதுபார்க்க பணத்தை சேகரிக்க சொல்லியிருந்தும், எந்த பலனும் இல்லை. நல்ல உள்ளம் படைத்த ஒவ்வொருவரும் நிர்வாக திறமை இல்லாதிருக்கிறார்கள். ஆலய வேலைக்காக சேகரித்த பணத்தில் அவர்கள் நேர்மையற்றவர்களாக இருந்தார்கள் என்று வேதத்தில் பதிவு இல்லை. பணத்தை விவேகமில்லாமல் செலவு செய்ததாகவும் வேதம் சொல்லவில்லை. ஒரு வேலை ஜனங்கள் ஆசாரியர்கள் மேல் நம்பிக்கை இல்லாதிருந்ததினால் ஜனங்கள் மனப்பூர்வமாக கொடுக்கவில்லை. ஆலயம் இன்னும் பழுது பார்க்கபடாமலிருந்ததை அறிந்து, ராஜா ஆசாரியர்களிடம், நீங்கள் ஆலயத்தை பழுது பார்க்காமல் போனதென்ன என்று கேட்டான். அதற்கு ஆசாரியர் பதில் கொடுக்கவில்லை. எனவே ராஜாவின் உத்தரவு இப்படியாக இருந்தது; "இனி நீங்கள் உங்களுக்கு அறிமுகமானவர்களிடம் வாங்க வேண்டாம்." ராஜா இந்த காரியத்தை லேசாக எடுத்துக்கொண்டு ஆசாரியர்களை குற்றப்படுத்தாமல் விட்டுவிட்டான்.

ஆனால் இதற்காக ஒரு பெட்டியை உண்டியல் போலாக்கி அதை பிரகாரத்தில், பலிபீடத்தண்டையில் ஜனங்கள் உட்பிரவேசிக்கும் வலது பக்கத்தில் ஒரு ஆசாரியனின் பொறுப்பில் வைத்தார்கள். இந்த முறை வெற்றிகரமாக செயல்பட்டது. பணம் வேகமாக சேர்ந்தது. சீக்கிரத்தில் ஆலயத்தை பழுதுபார்க்க தேவைக்கும் மேலாக பணம் சேர்ந்தது. தேவைக்கும் மேலான காணிக்கைகள் மறுக்கப்பட்டன. ஆலயம் நேர்த்தியாக பழுதுபார்க்கப்பட்டது. அதன் பிறகு ஆசீர்வாதம் வந்தது.

இந்த காரியத்தில் நமக்கு ஒரு பாடம் இருக்கிறது. ஜனங்கள் பலனை காண விரும்புகிறார்கள். (1) தரும நோக்கத்திற்காக கொடுக்கப்பட்ட அனைத்து பணமும் முறைப்படி பயன்படுத்தப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறார்கள். (2) பரிசுத்தவான்களிடத்திலிருந்தும் பாவிகளிடத்திலிருந்தும், பலவந்தமாகவோ, இனிமையாக பேசியோ பிச்சையெடுத்தோ பெறப்பட்டதைக் காட்டிலும் தானாக மனமுவந்து கொடுக்கப்பட்ட காணிக்கைகள் தேவனாலும் மனிதராலும் அங்கீகாரம் பெறும். கர்த்தரினிமித்தம் கொடுப்பவர்கள் ஒவ்வொருக்கும் ஆசீர்வாதமாக இருக்கும். அவர் புண்ணிய காரியத்திற்கு கொடுப்பதோடல்லாமல், தரும சிந்தையை தனது மனதில் அபிவிருத்தி செய்கிறார். நமது கர்த்தர் கூறியதாவது: "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்." கொடுப்பது தானாக மனமுவந்து கொடுப்பதாக இருக்க வேண்டும்.

சபையானது பிச்சை எடுப்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் பெரும் தீங்கு செய்வதாக இருக்கிறது. சில சபைகளில், தனிப்பட்ட முறையிலும் பொதுவாகவும் வேண்டிக் கேட்டுக் கொண்டும், உண்டியலை அனுப்பியும் பணம் பிச்சை எடுப்பது பிரதான நோக்கமாக இருக்கிறது என்று குறிப்பிடப்படுகிறது. சபை கண் காட்சி, சபை உணவுகள், பைகளை எடுத்தல் முதலானவைகள் உண்டியல் மூலமோ, தனிப்பட்ட முறையில் வேண்டிக் கேட்டுக் கொள்வதைக் காட்டிலும் மிகவும் குற்றமானவைகள் ஆகும். இப்படிப்பட்ட முயற்சிகளை சிலர் "ஆட்டின் பால் கறத்தல்" என்று அழைக்கிறார்கள். கர்த்தரின் ஜனங்கள் செம்மறியாடுகளாக இருக்க வேண்டும், உலக ஜனங்களோ வெள்ளாடுகள்.

கிறிஸ்தவன் தனது தகுதிக்கும் அக்கறைக்கும் தக்கதாக கொடுக்க வேண்டும் என்றும் ஆராதனை செய்யாதவர்கள் கொடுக்கும்படி எதிர்பார்க்கவோ, அப்படி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படவோ கூடாது என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு மனதில் பதிய வைக்கிறது. ஆனால் சபை காரியங்களுக்காக சேர்க்கப்பட்ட அதிக தொகையானது விருப்பமில்லாத ஜனங்களால் கொடுக்கப்பட்டது என்பதையும். அவர்கள் இந்த

காரியங்களில் விருப்பமில்லாதவர்களாகவும், இன்னும் அதை எதிர்ப்பவர்களாகவும் கூட இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் அறியவில்லை! இப்படியாக புரட்டஸ்டண்ட் வியாபாரிகள் கத்தோலிக்க சபை தரும ஸ்தாபனங்களுக்கு, தமது வாடிக்கையாளர் என்ற வகையில் அடிக்கடி கொடுக்கிறார்கள். இதுபோல கத்தோலிக்க வியாபாரிகளும் புரட்டஸ்டண்ட் சபை காரியங்களுக்கு தரும சிந்தனையினால் அல்ல, வாடிக்கையாளர் என்ற வகையில் தருகிறார்கள்.

சுவிசேஷ கடிந்து கொள்ளுதலுக்கு இதுதான் சரியான நேரமாக இருக்கிறது. தேவன் உங்களை ஆசீர்வதித்திருப்பதற்கு ஏற்ப, சபை மற்றும் தரும காரியங்களுக்காக ஒரு தொகையை வாரத்தின் முதல் நாளிலேயே நீங்கள் ஒவ்வொருவரும் எடுத்து வைத்து விடுங்கள். இப்படி தானாகவே கொடுப்பதே தேவனுடைய பார்வையில் மேன்மையானதாகக் காணப்படும். இப்படிப்பட்டவைகளே அது விதவையின் ஒரு காசாக இருந்தாலும் சரி, அல்லது பணக்காரரின் பெருந்தொகையாய் இருந்தாலும் சரி, தெய்வீக ஆசீர்வாதத்தைப் பெறும்.

### ஆலயச் சுவரில் உள்ள திறப்புகள்

ஆவிக்குரிய ஆலயத்தை கவனித்து தற்போது அனுபவிப்பதைக் காட்டிலும் அதிகமாக விரும்ப முடியாது என்பதை பெரு நகர அபாரமான சபைகளினால் வெளியரங்கமாக அடையாளப்படுத்துகிறதை நாம் உணர்கிறோம். நமது கால சபையின் நிலைமையை வருணித்து வேத வாக்கியங்கள் லவோதிக்கேயா சபையை உருவகமாக கூறுகிறதாவது: "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல, அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி, அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிற படியினால், உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன். நீ நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவான் என்றும், திரவிய சம்பன்னனென்றும் எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்கிறபடியால்; நான், நீ ஐசுவரியவனாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும், என்னிடத்தில் வாங்கிக் கொள்ளவும் நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்." (வெளி 3:15–18)

ஆகையால் ஆவிக்குரிய நிலைமையில் பார்க்கும் போது, தற்கால சபைக்கு பழுதுபார்த்தல் அவசியமாயிருக்கிறது. வெளியரங்கமாக சபையானது செல்வச் செழிப்பாயிருக்கிறது. ஆனால் ஆவிக்குரிய விதத்தில் தரித்திரனாயிருக்கிறது. சபையின் படித்த ஊழியர்கள் கூட வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்கிற அனைத்து விசுவாசத்தையும் விட்டுவிட்டார்கள். இன்னும் அவர்கள் நாத்திகர்கள் என்று அறியப்படாமல் இருந்தாலும், சற்று குறைவான கடினமான வார்த்தைகளாகிய "உயர் விமர்சனம்," "பரிணாமவாதிகள்" என்று அறியப்படுகிறார்கள். அநேகரிடம் தேவன் ஒருவர் இருக்கிறார் என்கிற விசுவாசமே ஆட்டங்காண்கிறது. நாம் அறிவில்லாத இயற்கையை தேவனாக பெற்றிருக்கவில்லையா என்று ஆச்சரியப்படுகிற அளவுக்கும், மனுக்குலமும் மற்ற எல்லா அறிவுள்ள ஜீவிகளும் "பரிணாம வளர்ச்சியினால்" உண்டானவைகள் என்று கூறுகிற அளவுக்கும் அவர்கள் சென்றிருக்கிறார்கள். இந்த விபரீதமான நிலைமைக்கான காரணமும் அடிப்படையும் வெகு தூரத்தில் இல்லை.

"இருண்ட காலங்களில்" உருவாக்கப்பட்ட விசுவாச பிரமாணங்களின் அபத்தங்கள், அறிவுள்ள ஜனங்களால் இனியும் ஏற்றுக் கொள்ள முடியாதபடி மிகவும் பெரிதாக இருக்கின்றன. இந்த அபத்தங்கள் (தவறுகள்) வேத வாக்கியங்களை அடிப்படையாகவும் அதனால் ஆதரிக்கப்படக் கூடியதாகவும் இருப்பதாக நாம் தவறாக நினைத்துக் கொண்டிருந்தோம். கடந்த கால விசுவாச பிரமாணமானத்தின் சத்தியமானது ஒன்றுக் கொன்று முரணாக மாத்திரமல்ல, வேதத்துக்கும் முரணாக இருக்கிறது. இதை அறிந்து கொள்ள, இதை விசுவாசிக்க, நமது பிதாக்களின் நிறமுள்ள கண்ணாடிகளை அகற்றிவிட்டு, இந்தயுக முடிவில் தேவன் தமது பிள்ளைகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற வெளிச்சத்தை அவர் தரும்படி நமது இருதயத்தை அவர் பக்கம் திருப்பி வேத ஆராய்ச்சிக்கு வர வேண்டும் என்று இது அறிவிக்கிறது. இது குறித்து வேதம் கூறுகிறதாவது: "பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கின்ற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனிப்பது நலமாயிருக்கும்." (2 பேதுரு 1:19)

### இந்த நேரத்திற்கான கடமை

தேவனுடைய வீடாகிய சபையின் ஆவிக்குரிய பழுதுகளை கவனித்து, கர்த்தரை நேசித்து அவரை ஆராதிக்கிறவர்கள் இந்த ஆவிக்குரிய நிலைமையை உயர்த்தும்படி தங்களது பங்கை, கடமையை செய்ய வேண்டும். இதை முழுமையாக மத அல்லது குருக்கள் வகுப்பாரிடம் விட்டுவிடக் கூடாது. சீயோனின் ஆவிக்குரிய சுவர்களை எடுப்பித்துக் கட்ட ஒவ்வொருவரும் தங்களது பங்கை செய்ய ஜனங்கள் சந்தோஷம் கொள்ளவும், நிலைமையை உயர்த்தவும் வேண்டும். அந்த ஆவிக்குரிய சுவர்கள் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை" உடையதாக இருக்கிறது.

இந்த பழுதுகளை சீர்படுத்தும் பொருட்டு நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னைத் தானே கேட்டுக் கொள்ள வேண்டும். சத்தியம் மற்றும் நீதியின் மேல் எனது வைராக்கியத்தையும் பாவம் மற்றும் தப்பறையை நான் வெறுப்பதையும் நான் எப்படி கர்த்தரிடம் வெளிப்படுத்துகிறேன் என்பதை கேட்டுக் கொள்ள வேண்டும். இந்த கேள்விக்கு பதில்கூறும் வண்ணமாக சத்தியத்தை புரிந்து கொள்ளவும். மற்றவர்கள் அதைப்புரிந்துகொள்ள உதவுவதிலும் ஒவ்வொருவரும் தனது முயற்சியை இரட்டிப்பாக்க வேண்டும். "இருண்ட யுகத்தின்" விசுவாசப் பிரமாணம் மற்றும் முறைமைகளினால் உண்டான சேதம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் நாம் இதைச் செய்ய வேண்டும்.

## R5793 Proper Basis of Honour in the Church

## சபையில் கனத்திற்கான சரியான அடிப்படை

*கேள்வி : மத்தேயு 20:27 கூறுகிறதாவது; "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்ககடவன்." கர்த்தருடைய ஜனங்களிடையே முதன்மையானவாயிருக்க விரும்புவது சரியான விருப்பமா? இங்கே நாம் செய்கிற ஊழியத்திற்குதக்கதாக பலன் பரலோக ராஜ்யத்தில் நிலைமை இருக்கும் என்று நாம் புரிந்து கொளள வேண்டுமா?*

பதில் : கர்த்தர் தமது சீஷர்களிடத்தில், அவர்கள் சம்பந்தப்பட்டவரை ஒரு குறிப்பிட்ட பலவீனத்தை – மனித குடும்பத்தில் பொதுவாக இருக்கக் கூடிய ஒரு விருப்பத்தை – ஒரு உயரிய நோக்கத்தின் ஆவியை குறிப்பிட்டிருந்தார். புறஜாதியாரிடையே சிலர் தலைமை ஸ்தானத்தை அப்பியாசப்படுத்தி, மற்றவர்களை அடிமைப்படுத்தி ஊழியம் செய்ய வைத்ததையும், ஆனால் இது இயேசுவின் சீஷர்களிடையே கிடையாது என்பதையும் இந்த வசனம் கூறுகிறது. அவர்கள் ஒரு வேறுவிதமான ஆவியினால் இயக்கப்படுகிறவர்களாக இருந்தார்கள். கிறிஸ்துவின் சீஷர்களோடு இருக்கிற ஆவி அதிகாரம் செலுத்தக் கூடியதாகவோ, மற்றவர்களை ஆளுகை செய்யக் கூடியதாகவோ இல்லாமல் ஒரு அன்பின் ஆவியாக, மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய நாடுகிற ஆவியாக, மற்றவர்களுக்காக கிரியை செய்கிற ஆவியாக, மற்றவர்களுக்கு ஊழியம் பண்ண தம்மை அர்ப்பணிக்க விரும்புகிற ஆவியாக இருக்கிறது.

இதன் அடிப்படையில் இந்த வசனத்தை மேலும் கவனிக்கிறோம். தலைமையதிகாரியாக இருக்கக் கூடிய சிலர் கர்த்தருடைய ஜனங்களுக்கிடையே இருப்பார்கள். ஒரு கூட்டத்தில், ஒரு ஐக்கியத்தில், ஒரு வகுப்பில் இப்படி இருப்பது அவசியமாயிருக்கிறது. அங்கே சமமான திறமையுள்ளவர்களாக எல்லாரும் இருக்க மாட்டார்கள். சிலர் பிறவியிலேயே அதிக திறமையுள்ளவர்களாகவும் சிலர் குறைவான திறமையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். சிலர் தலைமையதிகாரியாக இருக்க தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். சரிசமானமாக இருப்பது இயலாததாக இருக்கிறது.

சபையை வழிநடத்த தேவனுடைய பரிசுத்த வான்களில் கூட இப்படி இருக்க வேண்டியது நல்லதாக இருக்கிறது. பிறகு, தலைமை அதிகாரியாக இருப்பதற்கு வரையறை என்ன? மற்றவர்களை அடக்குகிறவர்ளாக இருக்க வேண்டுமா? இல்லை; அது அதற்கான வரையறை இல்லை. அதிகாரம் செலுத்தும் திறமையும் இன்பமாக பேசுகிறவராகவோ அல்லது, சில திறமையால் அதிகாரம் செலுத்திகிறவராகவோ அல்லது உயர்ந்த படிப்போ, அல்லது செல்வம் உடையவராகவோ இப்படிப்பட்ட வகையினராகவோ இருக்க வேண்டுமா? இல்லை. இது சரியான திட்ட அளவாக இருக்க முடியாது. பிறகு சபையை வழி நடத்த அங்கீகரிக்கப்பட்ட திட்ட அளவு என்ன?

### சுய மகிமையே உயரிய நோக்கமாக இருக்கக்கூடாது

ஊழியம் செய்கிற ஆவியை உடையவர்களையே நாம் பார்க்க வேண்டும் என்று பதில் கூறுகிறோம். பெரும் ஊழியம் செய்து, சபைக்கு அதிக ஆசீர்வாதங்களை கொண்டு வருபவரை, உண்மையான ஊழியத்தை செய்ய முயற்சிக்கிறவரை உங்கள் சபையின் மூப்பராக கருத வேண்டும். நமது கர்த்தர் போதிக்கும் போது தனிப்பட்ட நபருக்கு போதிக்காமல் அனைத்து அப்போஸ்தவர்களுக்கும் போதித்தார். ஆனால் அவைகள் தனிப்பட்ட நபருக்கும் பொருந்தும், நம்மில் யாராவது விசேஷித்த விதமாக ஊழியம் செய்ய நோக்கம் உடையவர்களாயிருந்தால் அந்த எண்ணம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலிருந்தும் வரவேண்டும். உலக ஜனங்களைப் போல் செய்யக் கூடாது. நாம் எதிரான வழியை எடுக்க வேண்டும். மனிதர்களின் கனத்தை முற்றிலுமாக விட்டு விட வேண்டும். இந்த காரியத்தை தேவனிடம் விட்டுவிட வேண்டும். அவர் தமக்கு சரியானதை செய்வார். சகோதரர்களுக்கு வெறும் ஊழியம் செய்வதில் மட்டும் திருப்தி அடைகிறவர்களாக நாம் இருக்க வேண்டும். எந்த வகையிலும் நீங்கள் ஊழியம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை கர்த்தர் பார்ப்பாராக.

உயரிய நோக்கம் இல்லாத ஒருவர் எதையும் சரியாக செய்ய மாட்டார். நாம் விதைத்தாலும், உழுதாலும் என்ன செய்தாலும், அதை திருப்திகரமாக செய்ய நமக்கு ஒரு உயரிய நோக்கம் தேவைப்படுகிறது. நமக்கு சத்திய ஊழியம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்தால், அதை முடிந்தவரை மிகவும் தகுதியான முறையில் செய்ய நாட வேண்டும். இல்லையென்றால் நாம் தேவனுடைய தகுதியான ஊழியர்களாக இருக்க முடியாது.

ஆனால் நமது சொந்த மகிமைக்கான எந்த ஒரு உயரிய நோக்கமாயிருந்தாலும் அதை நாம் அப்பால் வைத்துவிட வேண்டியவர்களாயிருக்கிறோம். நம்மால் தெரிந்த அளவுக்கு தேவனுக்கு மிகவும் உயர்ந்த விதத்தில் ஊழியம் செய்ய நாட வேண்டும். சில காரியங்களில் நீங்கள் என்னை விட சிறப்பாக ஊழியம் செய்பவர்களாக இருந்தால், நான் உங்களிடமிருந்து கற்றுக் கொள்வது மிகவும் நல்லது, அதன் பிறகு நீங்கள் எதையாவது என்னிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடுமானால் அதைச் செய்யலாம். உண்மை, நாம் கர்த்தரின் நிமித்தம் விசேஷமாக மெச்சத்தகுந்தவைகளை அமைத்து இன்னும் அனைத்தையும் செய்ய வேண்டும். இந்த ஊழியம் அன்பினால் செய்யப்பட வேண்டும். அன்பினால் செய்யப்படாத எந்த ஊழியமும் கர்த்தருடைய பார்வையில் ஏற்புடையதாக இராது.

### அடக்கம் ஒரு பிரதான தேவை

கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான் என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். இது ஒரு சிறப்பான ஊழியம். இது தற்போது பேர் சபைகளில் இருப்பது போல அப்போஸ்தலர் காலத்தில் உயர்ந்த பதவியாக இருக்கவில்லை. ஆகையால் ஒரு கண்காணியானவன், ஆடுகளை அக்கறையுடன் கவனித்துக் கொள்ளுகிற ஒரு தாழ்மையான, பெயரிடப்படாத சபையின் ஊழியன். சபையின் ஒவ்வொரு பெயரிடப்படாத ஊழியனும் திறமையுள்ளவனாக, தேவனுடைய மந்தையை நன்றாக கவனிக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். இந்த மூத்த சகோதரரிடையே சபையின் போதகர்கள் இயற்கையாக திறமைசாளிகளாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனது திறமையை கர்த்தரின் ஊழியத்திலும் சகோதரரிடத்திலும் சத்தியத்திலும் பயன்படுத்த நாட வேண்டும்.

ஆண்டவர் இங்கே அமைத்திருக்கிற வரையறையை கர்த்தருடைய ஜனங்கள் யாராவது மறந்தால், அது பரிதாபிக்கக் கூடியதாக இருக்கும். இந்த பதவி கர்த்தரின் ஜனங்களடங்கிய சபையின் வாக்கு மற்றும் குரலினால் நியமிக்கப்பட வேண்டியதற்கு பதிலாக, மூப்பர் பதவி அவர்களது உரிமை என நினைக்கக் கூடியதாக காணப்படுகிறது. ஒவ்வொரு வரும் எக்லீசியா அல்லது சபையின் குரலை ஏற்றுக் கொள்ள விருப்பம் உடையவர்களாக இருப்பது நல்ல மனோபாவம் என்று நாங்கள் நம்புகிறோம். ஒருவர் எக்லீசியாவின் அங்கமாக சபைக்குள் சென்றுவிட்டால், பெரும்பான்மையோரின் (அது ஒருவர் அதிகமாக இருப்பதினாலோ அல்லது அதிக விழுக்காடு அதிகமாக இருந்தாலோ) சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்பட்டவராகிறார். இதைச் செய்த பிறகு ஒரு மூப்பராக அவர் தேர்வு செய்யப்பட்டாலும் அல்லது வேறொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தொடர்ந்து அவர் இதே மனோபாவத்தில் இருக்க வேண்டும்.

சரியான தகுதியில்லாத ஒருவரை மூப்பராக ஒரு சபை தேர்ந்தெடுக்கிற தவறு அடிக்கடி நடக்கிற காரியமாக இருக்கிறது. இது ஒரு வகுப்பாரில் சிலரை அதிருப்தியடையச் செய்து, இன்னொரு வகுப்பை ஏற்படுத்த வழிவகுக்கிறது. இது ஒரு ஞானமான வழியல்ல என்று நாங்கள் நினைக்கிறோம். ஒரு வகுப்பார் தவறு செய்யும் பட்டசத்தில் தேவன் அதை நன்மைக்கு ஏதுவாக ரத்து செய்யக் கூடியவராக இருக்கிறார். அதைத்திரும்பப் பெறுகிறவர்கள் (வாபஸ் பண்ணுகிறவர்கள்) தங்களுக்கு பயனுள்ள சில அனுபவங்களை இழக்கிறார்கள்.

எனினும் ஒரு வகுப்பானது தவறு செய்துவிட்டது என்று எப்பொழுதுமே உறுதியாக கூற முடியாது. இந்த காரியத்தில் அவர்களுக்கு தேவன் ஒரு பாடம் வைத்திருக்கிறார் என்று நாம் எப்படி அறிந்துகொள்ளக்கூடும்? தெரிந்தெடுக்கப்படுபவர் யாராக இருந்தாலும் தேவனுடைய ஆசீர்வாதத்தை கேட்டிருப் போமானால், நாம் அதில் நிலைத்திருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படாத ஒருவர். சத்தியத்தை சரியானபடி போதிக்கக் கூடியவராகவும், அநேக இடங்களை அறிந்தவராகவும், அந்த இடங்களுக்கு பிரயோஜனமானவராகவும் பயனுள்ளவராகவும் இருந்தால், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். எனினும் அவர் அந்த வகுப்பை விட்டு போகக் கூடாது. அவருக்கு வருகிற எந்த ஊழியத்தையும் செய்ய வேண்டும். அவர் சபையை விரிவுபடுத்துகிற ஊழியத்தில் தனது திறமையை பயன்படுத்தலாம். தான் மூப்பராக தெரிவு செய்யப்படவில்லை என்று நினைத்து தன்னை தனிமைப் படுத்திக் கொள்ளாமல் இருக்க வேண்டும். அவர் வெளியே சென்று ஊழியம் செய்ய சந்தர்ப்பங்களைக் காண வேண்டும். மூப்பர் மாற்றப்படுதலோ அல்லது மறுபடியும் அவர் தேர்ந்தெடுக்கப்படாமல் இருப்பதோ தேவன் அவருக்கு ஊழியத்தில் வேறொரு பகுதியை குறிப்பிடுகிறார் என்று பொருள்படுகிறது. தேவகிருபை அவரது ஊழியம் பரவலாக இருக்க வழி நடத்துகிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

உலக மனிதர்கள் நம்மைப் பற்றி என்ன கூறுகிறார்கள், என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றி நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. இது அற்பமானது; சபை என்ன நினைக்கும் என்பதும் அற்பமான காரியம். கர்த்தரை நாம் சந்தோஷப்படுத்த முயல வேண்டும். நம்மை நாமே உயர்வாக கருதிக் கொள்ளக் கூடாது. மற்றவர்கள் நம்மை எப்படி கருதுகிறார்கள் என்பதற்கான சந்தர்ப்பத்தை தர வேண்டும். ஆவியின் கனிகளில் நாம் எந்த அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறோமோ, அதைப் பொருத்தே தேவனுடைய ராஜ்யத்தில் நமக்கு இடம் கிடைக்கும் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். அன்பு தான் நம்மை தேவனுடைய ஊழியத்தில் வைராக்கியத்துக்கு வழி நடத்துகிறது.

## மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களை தெரிந்தெடுத்தல்

தொகுதி 6இல் சபையின் ஊழியர்களை தெரிந்துகொள்ளுவது பற்றி கொடுக்கப்பட்டிருக்கிற யோசனைகளை அப்பியாசப்படுத்துவதில் உள்ள சிரமங்களைக் குறித்து அநேக கேள்விகள் சில சகோதரர்களிடமிருந்து எங்களுக்கு வந்திருக்கிறது.

இந்த காரியத்தைக் குறித்து மாற்றயியலாத விதிகளை வைப்பது எங்களது எண்ணமில்லை. வேதாகமம் எதுவும் சொல்லவில்லை. இப்படிப்பட்ட விதிகளை ஏற்படுத்த யாருக்கும் உரிமையில்லை. முடிந்த அளவிற்கு தேர்வு ஏக மனதாக இருக்க வேண்டும் என்றும் 75% அல்லது அதற்கு மேல் சபையில் சகோதரருக்கு ஆதரவு இல்லாதபட்சத்தில் அவர் அதை ஏற்றுக் கொள்வது ஞானமற்றது என்பதும் எங்களது யோசனையாக இருக்கிறது. 25% அல்லது 30% சிறுபான்மையாக இருப்பவர்கள் சபையை இடையூறு பண்ணவும் அல்லது தெரிந்தெடுத்தலுக்கு தடங்கல் செய்ய உற்சாக மூட்டுகிறோம் என்று இதற்கு பொருலல்ல.

மிகச் சரியாக சொல்வோமேயானால், சபையில் ஒருவர் பெரும்பான்மையாக இருந்து எந்த காரியத்தையும் தீர்மானிக்கலாம். ஆனால் அன்பானது மற்றவர்களது மனோ நிலையையும் கவனிக்கும்படி தூண்ட வேண்டும். உதாரணத்திற்கு நூறு பேர் ஒரு சபையில் இருந்தால் 51 பேர் சபையில் யார் ஊழியனாக இருக்கலாம் என்பதை தீர்மானிக்கலாம். மற்ற 49 பேரும் அதை அமைதியாக பூரணமாக ஏற்றுக் கொண்டு, பெரும்பான்மையோரின் சித்தத்தை ஆதரிக்க பாடுபட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையிலுள்ள, அனைவரின் நன்மையும் மட்டுமே 51%க்கு மேலேயுள்ளவர்களின் யோசனைகளாக இருக்க வேண்டும். ஏகமனதாக தீர்மானிக்க அன்பானது தூண்டப்பட வேண்டும். ஆனால் இதை எப்படி அடைவது?

நூறு பேர் உள்ள சபையில் ஆறு மூப்பர்கள் ஊழியத்திற்கு தேவை என்று வைத்துக் கொள்வோம். அதாவது **A, B, C, D, E, F.** என்ற ஆறு பேர் மூப்பருக்காக நிற்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். **A, 1 00** ஓட்டும், **B, 90** ஓட்டும், **C 80,** ஓட்டும் **D 70** ஓட்டும், **E 60** ஓட்டும் **F 50** ஓட்டும் பெறுகிறார்கள் என்றால் சரியாக சொல்வோமேயானால், 90% என்ற அடிப்படையில், இருவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படலாம். ஆனால் அவர்கள் சபைக்கு தேவையான வேத அறிவைப் பெற்றிருந்து அவர்களது நெறிமுறைகளில் அவமானப் படத்தக்கதாக எதுவும் இல்லாதிருந்தால் ஆறு பேருமே ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் யோசனை கூறுகிறோம்.

பரிசுத்த பவுல் மூலம் கொடுக்கப்பட்ட நிலைப்பாடுகள் சொல்லர்த்தமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நினைப்பது தவறாகும். ஏனெனில் அவர் கூறுகிற அனைத்து தேவைகளையும் யாரும் பெற்றிருக்க மாட்டார்கள். ஒரு சீரிய உயர்ந்த மூப்பர் பெற்றிருக்க வேண்டியவைகளைப் பற்றி அப்போஸ்தலர் கூறியிருக்கிறார். ஒவ்வொரு வாக்காளரும் கர்த்தருடைய சித்தத்தை நினைப்பதில் இந்த சீரிய எண்ணத்தை மனதில் உடையவர்களாக இருக்க வேண்டும். பெரிய குற்றம் ஏதும் இழைக்காதிருந்தால் எந்த வகுப்பும் மூப்பர் இல்லாமல் விடப்படக் கூடாது.

"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (மத் 5:48) என்று நமது கர்த்தர் கூறின போது அவர் பரிபூரண உதாரணத்தை நமக்கு ஏற்படுத்தினார். தேவன் பூரண சற்குணராக இருப்பது போல யார் பூரண சற்குணராக இருக்கிறார்கள்? "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10) ஒரு குறைவான நிலைப்பாட்டுடன் நாம் நம்மை அளவிடக் கூடாது. ஆனால் பரிபூரண நிலைப்பாட்டுடன் அளவிட வேண்டும். இப்படியாக நாம், மூப்பர்களாகவும் மந்தைக்கு உதாரணர்களாகவும் இருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் மிகவும் சிறப்பானவர்களாக இருக்கும்படி நமக்கு நாமே உதவுகிறவர்களாக இருப்போம்.

தண்ணீர் முழுக்கு மூலம் வெளியரங்கமாக அடையாளப்படுத்துகிற முழுமையாக அர்ப்பணித்தவர்கள் தவிர வேறு யாரும் ஓட்டுபோட கூடாது என்பது எப்பொழுதும் நினைவில் வைக்கப்பட வேண்டும். இப்படி தண்ணீர் முழுக்கினால் தங்களது அர்ப்பணிப்பை அடையாளப் படுத்தாதவர்களை சகோதரர்கள் அல்ல என்று ஒதுக்கப்படக் கூடாது. சபையில் ஊழியம் செய்ய தகுதியானவர்கள் யார் என்று தங்களது அபிப்பிராயங்களை கூறுகிற அளவுக்கு அவர்கள் இன்னும் வளரவில்லை என்று எண்ணப்பட வேண்டும். மேலும் அவர்களே சபையில் ஊழியம் செய்ய தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள்.

### உறுதி மொழியை திரும்ப எடுத்தல்

இன்னொரு கேள்வி அவ்வப்போது எழுகிறதுவதாவது: சபையின் ஊழியராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நாம் காண்கிற, எல்லாருக்கும் சிபாரிசு செய்யப்படுகிற விசேஷித்த உறுதிமொழியை எடுக்க வேண்டுமா என்பது ஆகும்.

சகோதரத்துவத்துக்கு பரீட்சையாக இந்த சாதாரண உறுதி மொழியை நாம் எடுத்துக் கொள்ள முடியாது. கர்த்தர் இந்த சமயத்தில் இதை கொண்டு வந்தார் என்று நாம் நம்புகிறோம். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அர்ப்பணம் செய்தவர்களிடையே இது ஒரு சோதனையாக செயல்படும் என்று அவர் கருதுகிறார். எனினும் வேதாகமமானது இதை சகோதரத்துவத்தின் ஒரு பரீட்சையாக இதை செய்யும்படி அதிகாரம் கொடுக்கவில்லை. இது தெய்வீக வழிகாட்டுதல் என்பதற்குப் பதிலாக, தீர்மானிக்கிற ஒரு காரியமாக இருக்கிறது. மூப்பருக்குரிய ஒரு குணலட்சணமாக வேதாகமத்தில் சொல்லப்படாமலிருந்ததாலும், ஆங்கில மொழியை தவறாக பயன்படுத்தாமலும், அவலட்சணமாக இராதபடிக்கு கவனம் அதிகமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கிடையே பிரியமான மூப்பர் மற்றும் உதவிக்காரர்கள் அனைவரும் உறுதி மொழிக்கான நியாயத்தில் ஒருமித்த கருத்து இருக்க முடியும் என்பதை அறிவதிலும், அது தெய்வீக வார்த்தைகளுக்கு இசைவாகவும் நமது அர்ப்பணத்தின் உறுதிமொழிக்கும் இசைவாக இருப்பதிலும், மேலும் ஒரு இரும்பு எல்லைக்குள் இருப்பது போல இருப்பதை அறிவதிலும் நாம் களி கூருவோம். அந்த உறுதிமொழியை எடுப்பதில் எந்த ஒரு கிறிஸ்தவ சகோதரனும் அல்லது சகோதரியும் எதிர்க்க மாட்டார்கள். நம்மில் சிலருக்கு அவர்களது மன எண்ணத்தில் அல்லது அவர்களது விவேகமான மனோசக்தியில் அது ஏதோ தவறை உணர்த்துவதாக காணப்படுகிறது. எனினும் அவ்வளவு சரியாக தீர்மானிக்க நாம் திறமைமிக்கவர்கள் அல்ல. ஆண்டவர் கூறியது: "தீர்ப்பு செய்யாதே."

உறுதிமொழி எடுத்தவர்கள் மற்றும் இந்த காரியத்தில் கருத்து ஒருமித்தவர்களுக்கும், மூப்பர்கள் மற்றும் உதவிக் காரர்களை தேர்ந்தெடுப்பதில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். எனினும் சபையை நடத்த திறமையுள்ளவர்களை, எந்த வகையிலும் உறுதிமொழியை எதிர்க்காதவர்களை தேர்ந்தெடுக்கலாம். உறுதிமொழிக்கேற்ப தங்களால் முடிந்தவரை வாழ்கிறோம் என்று அறிக்கையிட்டு, மற்றவர்களுக்கு உதவும் போது தீங்கிழைக்கலாம் என்ற பயத்தில் இந்த சாதாரண உறுதி மொழியை எடுக்க மறுக்கிறவர்கள் விஷயத்தில் உண்மையாக இருக்கிறது. நாம் அவர்களது நியாயப்படுத்துகிற முறைமைகளையும் அவர்களது மனோநிலையையும் நாம் புரிந்துக்கொள்ள முடியாமல் இருக்கலாம். நம்மால் புரிந்து கொள்ள முடியாத அல்லது பாராட்ட முடியாத இப்படிப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலையில் அதை கடந்து செல்ல வேண்டும்.

## R 5795 Plain Food for Clear Brains

## தெளிவான புத்திக்கு சாதாரண உணவு

*தானியேல் 12 : 1,2*

*யூத கைதிகள்–பாபிலோனிய நீதிமன்றம் – ராஜாவின் ருசியான உணவு – தானியேலும் அவரது நண்பர்களும் – நியமம் மற்றும் அதன் நன்மைகளுக்கு உண்மையாயிருத்தல் – நியமங்கள் நித்தியமானவைகள் – சுய கட்டுப்பாடு ஆசீர்வாதங்களை கொண்டுவரும்.*

*"விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள்." 1 கொரிந்தியர் 16:13*

இன்றைய பாடம் உலகின் மதுவிலக்கு ஞாயிறுக்காக விசேஷமாக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்கு என்கிற இந்த காரியம் உலகளாவில் இந்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருப்பதால் நாம் எவ்வளவு சந்தோஷப்படுகிறோம். போதையூட்டும் மதுவகைகளை நாங்கள் ஞானமாக, நன்மைக்காக பயன்படுத்துகிறோம் என்று கூறுகிற சிலரது கூற்றை நாங்கள் மறுக்கவில்லை. இதில் சிலரது கூற்று உண்மையாக இருக்கலாம். அப்படிச் செய்பவர்கள் மிகவும்

சொற்பமான பேர்தான். மனுக்குலத்தில் பெரும்பான்மையோர் இப்படிப்பட்ட ஒரு மார்க்கத்தை கடைபிடிக்க சுயகட்டுப்பாட்டை பெற்றிருக்கவில்லை. மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் எப்பொழுதும் இந்த போதையூட்டும் மதுவகைகளை பெரும்பாலனவர்கள் என்றென்றும் குடிக்காதபடி ஒரு வழிமுறை நிச்சயமாக தீர்மானிக்கப்பட வேண்டும்.

வாழ்க்கையின் கஷ்டங்கள், குற்றம், தலைவலிகள், மாரடைப்பு போன்றவைகள் மதுவுக்கு நேரடியாக தொடர்புள்ளதை நாம் கவனிக்கும்போது, ஞானமாகவும் சமநிலையாகவும் உள்ள மனுக்குலம் பொதுவாக சகமனிதர்களின் நன்மைக்காக தங்களது சுதந்திரத்தை கட்டுப்படுத்த விரும்பாமலிருப்பது வியப்பாக காணப்படுகிறது. மதுவிலக்கு மனோபாவம் – மதுபான வகைகளை முழுமையாக தடை செய்யும் மனோபாவம் எவ்விடங்களிலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. நமது நாட்டிலும் அது மிகவும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. எனினும் உலகம் மதுபானத்திலிருந்து திரும்பி விட்டது என்று நினைத்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. மேசியாவின் ராஜ்யம் பூமியின் காரியங்களை முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்வரை நிச்சயமாக ஒரு பூரண நிரந்தர பலனை அடைய முடியாது. அதன் பிறகு அனைத்து தேவனுடைய பரிசுத்த ராஜ்யத்தில் தீங்கும் கேடும் இராதென்று நாம் நிச்சயப்படுத்துகிறோம். (ஏசாயா 11:9)

வோட்கா என்ற ஒருவகை சாராயத்தை ரஷ்யர்கள் இராணுவத்திலும் நாடு முழுவதிலும் நிறுத்திவிட்டார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் அண்மையில் வந்த செய்தி ஜனங்களிடம் வழக்கமான போதையூட்டும் மதுபானமாகிய வோட்காவிற்கு பதிலாக தனியார் மதுபான ஆலையில் உற்பத்தி பண்ணுகிற மதுவானது எப்பொழுதைக் காட்டிலும் அதிகமாக பரவியிருக்கிறது என்பதாகும். பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தின் இராணுவத்தில் மதுபானம் நிறுத்தப்பட்டுவிட்டது மற்றும் நாட்டில் மதுவிலக்கு வளர்ச்சியடைகிறது என்ற செய்தியானது அனைத்து இராணுவங்களிலும் வீரர்களை ஊக்கமூட்ட மதுபானம் அவசியம் என்ற செய்தியால் ஈடுகட்டப்படுகிறது. அந்த காலத்தில் மிகப் பெரிய குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொள்ள சுற்றியுள்ள குழிகளில் செல்ல கட்டளையிடப்படுவார்கள். அவர்களில் பாதிபேர் அல்லது சில சமயங்களில் எல்லோருமே காயப்படுவார்கள் அல்லது மரித்துப்போவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு மதுபானம் தேவைப்படுகிறது.

யுத்தமானது எவ்வளவு பயங்கரமானதாக இருக்கிறது! மரணத்திற்கு போவதற்கு கட்டளையிடப்படுவதற்கு முன்னால் எப்படி மனிதர்கள் பாதியளவாவது மது மயக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது எவ்வளவு அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது! ஐயகோ! யுத்தம் செய்யும் ராஜ்யங்கள் தங்களை கிறிஸ்துவின் ராஜ்யம் என்று கூறிக்கொள்வது எவ்வளவு அபத்தமாக இருக்கிறது. தேவனுடைய பிரியமான குமாரனின் இராஜ்யம் எப்படி இந்த ராஜ்யங்களிலிருந்து மாறுபட்டிருக்கிறது என்பதும் அது ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதும் நமக்கு எவ்வளவு சந்தோஷமானதாக இருக்கிறது! மகா ஆபத்து நாளில் தேவனுடைய ராஜ்யம் முழு வானத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்று வேதாகமம் அறிவிப்பது எவ்வளவு அவசியமானதாக காணப்படுகிறது! அது முன்னரே ஆரம்பமாகிக் கொண்டிருக்கிறது. அராஜகம் மற்றும் தற்கால சமுதாய முறைமைகளின் அழிவுடன் இது முடிவுக்கு வரும் என்று வேதாகமம் அறிவிக்கிறது. புதிய ஒழுங்குமுறை அதன் இடத்தை எடுத்துக் கொள்ளும் என்பதால் தேவனுக்கு ஸ்தோத்திரம். இது புதிய வானம், புதிய பூமி என்று அடையாள மொழியில் அழைக்கப்படுகிறது. அதில் நீதி வாசமாயிருக்கும்; பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்கள் ஓய்ந்திருக்கும். (சங்கீதம் 46: 1 பேதுரு 3:13)

## சாதாரண உணவு-இராஜாவின் ருசியுள்ள உணவல்ல

மூவாயிரம் வருடங்களுக்கு முன்பு குரங்கு மனிதர்கள்தான் இருந்தார்கள் என்று நினைக்கிறவர்களுக்கு இந்த கட்டுரை ஒரு பாடத்தைக் கொடுக்கிறது. இஸ்ரயேல் தேசத்திலிருந்து பாபிலோனுக்கு சிறைக் கைதிகளாக கொண்டு செல்லப்பட்ட சில வாலிபர்கள் ஞானிகளாக இருந்ததை மாத்திரமல்ல பாபிலோன் ராஜாவிடம் இருந்த ஞானத்தையும் இது காண்பிக்கிறது. கைதிகளிலிருந்து நேபுகாத் நேச்சார் சில வாலிபர்களை தெரிந்து கொண்டு அரசாங்கத்தில் ஞான வான்களாகவும் ஆலோசனைக்காரர்களாகவும் இருக்க பாபிலோனிய பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் காண்பித்த சிந்தனையின் பரிமானம் இக்காலத்தில் அரசாங்க ஆலோசகர்களாக இருக்கிற சிலருக்கு ஒத்திருந்தது. மகா பிரிட்டனின் அரசர் சில இளம் ஜெர்மானிய கைதிகளை ஆலோசகர்களாக ஆக்கும் ஏற்பாடுகளை செய்வாரா? அல்லது கெய்சர் (ஜெர்மானிய சக்கரவர்த்தி) இளம் பிரிட்டிஷ்காரர்களுக்கு இப்படிப்பட்ட சலுகையைக் கொடுப்பாரா? நேபுகாத் நேச்சார் 2500 வருடங்களுக்கு முன்பு காண்பித்த விசாலமான இருதயத்தை இக்காலத்தில் மற்ற உலக நாடுகளில் உள்ளவர்கள் காண்பிப்பார்களா?

இது மட்டுமல்ல யூத வாலிப கைதிகள் தங்களை தத்தெடுத்துக் கொண்ட நாட்டினருக்கு தங்களுக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்திற்கு தக்கதாக தங்களது திறமையை அவர்களது நன்மைக்காக நிரூபித்துக் காட்டினார்கள். தானியேல் பாபிலோன் தேசத்தில் பிரதம மந்திரியானார். மற்ற யூதகைதிகள் பாபிலோனிய அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் தலைவர்களானார்கள். இது நிச்சயமாக, யூதர்களில் சிலர் மிகச்சிறந்த திறமையுடையவர்களாயிருந்தார்கள் என்பதை மட்டுமல்ல, குறுகிய மனப்பான்மையும், பொறாமையும் இல்லாமல் மற்றவர்கள் மெச்சும்படி அரசாங்கத்துக்கு மிகச்சிறந்த நன்மைகளை செய்தார்கள் என்பதையும் காண்பிக்கிறது.

இன்றை பாடம் நான்கு எபிரேய கைதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு நேபுசாத் நேச்சாரின் விசேஷித்த பள்ளியில் வைக்கப்பட்ட காலத்தை நமக்கு கூறுகிறது. இது அவர்களது பயிற்சிக்காக மாந்திரமல்ல, அவர்களது சரீர நன்மைக்காகவும் கொடுக்கப்பட்டது. இராஜாவின் உணவு அவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. அரசு குடும்பத்திற்கு தயாரிக்கப்பட்ட உணவு அவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. இது அவர்களது முன்னேற்றத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் தேவையாயிருந்தது.

தானியேலும் அவரது மூன்று நண்பர்களும் நிலைமையை மிகவும் ஞானமாக கையாண்டார்கள்தேவனுடைய ஆசீர்வாதத்தின் கீழ், உண்மையான தேவனைப் பற்றிய அறிவின் மூலம் பெற்றுக் கொண்ட தயவு, நற்குணம், பெருந்தன்மை போன்ற குணங்களினாலும், பக்தியுள்ள பெற்றோர்களின் விசுவாசமுள்ள பயிற்சியினாலும் தெய்வீக பிரமாணம் மற்றும் வாக்குத்தத்தங்களைப் பற்றிய அறிவினாலும் தானியேல் ராஜாவின் பிரதானிகளின் தலைவனின் அன்பான ஆதரவை பெற்றான். இப்படியாக நான்கு எபிரேய வாலிபர்களும் ராஜாவின் உணவாகிய ருசியுள்ள உணவு மற்றும் திராட்ச ரசத்திற்கு பதிலாக சாதாரண மரக்கறி உணவை தரும்படி கேட்டுக் கொண்டார்கள்.

பிரதானிகளின் தலைவன் அவர்களது வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள தயங்கினான். ஏனெனில் இந்த எபிரேயர்களின் முகங்கள் வாடிப்போனதாகக் காணப்படுமோ என்று பயந்தான். இதன் எதிரொலியாக ராஜா விசாரணை செய்து, ராஜாவின் கோபத்திற்கு ஆளாகி தண்டனை அடைய வேண்டியிருக்கும் என்று நினைத்துதான் தானியேலும் அவரது நண்பர்களும் இந்த உணவை பத்து நாட்களுக்கு கொடுத்துப்பார்த்து, தங்கள் முகங்கள் மற்றவர்களைக் காட்டிலும் நன்றாக இருந்தால் அதை தொடரும்படி கேட்டுக் கொண்டார்கள்.

பருப்பை உண்ண அனுமதிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். சரியாக சொன்னால் இது பருப்பு, பீன்ஸ் போன்ற மரக்கறி வகையைக் சேர்ந்ததாகும். மரக்கறி உணவாகிய பருப்பு, பீன்ஸ் போன்றவைகளில் மாமிச உணவில் உள்ளது போல சத்துக்கள் நிறைந்திருக்கிறது என்பதை உலகமானது உணர்ந்து கொண்டு வருகிறது. இன்னும் அதிகமதிகமாக மாமிச உணவு குறைக்கப்பட்டு, மரக்கறி பயன்படுத்தப்படுகிறது. நமது நாட்களில் இது பயனுள்ளதாக இருக்கிறது. ஆனால் வேதாகமம் மாமிச உணவை தடை செய்கிறது என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. கிறிஸ்தவர்கள் எந்த வகையான உணவு அவர்களது அனுபவத்தில் சரியானதாக இருக்கிறது என்பதை தீர்மானிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இவ்விதமாக தனது உடலுக்கு ஊட்டம் கொடுத்து கர்த்தரின் ஊழியத்தில் பயன்படுத்த வேண்டும். மாமிச உணவு உண்பது பாவமானது என்று எண்ணப்பட வேண்டியதில்லை. ஏனெனில் நமது ஆண்டவரும் அப்போஸ்தலர்களும், ஆடு, மீன் முதலிய மாமிச உணவை புசித்தார்கள் என்று வேதத்தில் பார்க்கிறோம்.

## தேவனுக்கும் நியமங்களுக்கும் உண்மையாயிருத்தல்

தானியேலும் அவரது நண்பர்களும் ராஜாவின் போஜனத்தின் ஒரு பங்கை பெற்றுக்கொள்ளாததற்கு ஒரு விசேஷித்த காரணம் இருக்கிறது. அந்த காலத்தில் மாமிச உணவை சாப்பிடும் முன்பு அதை விக்கிரகங்களிடம் அதன் ஆசீர்வாதத்திற்காக படைப்பது வழக்கமாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு ஆசீர்வாதம் மாமிச உணவுக்கு எந்த தீங்கும் இழைக்காதிருந்தாலும் – ஏனெனில் விக்கிரமானது ஒன்றுமில்லை. அது மாமிசத்தை ஆசீர்வதிக்கவோ அல்லது சபிக்கவோ முடியாது – அதை புசிப்பது யுதவாலிபர்கள் புறஜாதி தெய்வங்களிடமிருந்து ஆசீர்வாதம் பெறவே என்று மக்கள் நினைப்பார்கள். மேலும் இதன் மூலமாகவே அவர்கள் அறிவையும் ஞானத்தையும் பெற்றார்கள் என்று சொல்வதற்கு ஏதுவாகும். சந்தேகத்திற்கு இடமில்லாமல் இதுதான் அவர்கள் வேறு உணவை கேட்டுக் கொண்டதற்கு சரியான காரணமாகும்.

மேலும், வேதவாக்கியங்கள் மதுவை விலக்காமலிருந்தாலும், மதுவிலிருந்து விலகியிருப்பவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதத்தை அவைகள் கூறுகின்றன. அதே போல அன்னகர்களுக்கும் ஆசீர்வாதம் உண்டு. தானியேலும் அவரது சகாக்களும் கர்த்தரிடத்தில் முழுவதுமாக தெளிவாக அர்ப்பணம் செய்திருந்தார்கள். தாய் நாட்டை விட்டு புறஜாதி நாட்டில் இருந்தாலும் தங்கள் மதத்தின் மேல் உள்ள அக்கறை குறைவதற்கு பதிலாக, இன்னும் அதிகமாக இருந்ததாகவும் காணப்படுகிறது. எப்பொழுதையும் விட உண்மையான தேவனின் அவசியத்தை உணர்ந்து அவருக்கு உண்மையான ஊழியக்காரர்களாக இருக்க விரும்பினார்கள்.

புறஜாதி ராஜ்யத்தில் தலை நிமிர்ந்து வாழவும் சுத்தமான வாழ்க்கை வாழவும் தீர்மானித்திருந்த எபிரேய வாலிபர்களை கர்த்தர் எப்படி ஆசீர்வதித்தார் என்பது இந்த பாடத்தின் ஒரு பகுதியாகும். பத்து நாட்கள் சோதனையின் முடிவில் எபிரேய வாலிபர்களுக்கு அந்த மாறுபட்ட உணவு மிகவும் பயனுள்ளதாக காணப்பட்டது. குறித்த நாளில் இராஜா அவர்களை விசாரித்த போது, அவன் தன் ராஜ்யத்தில் உள்ள சகல சாஸ்திரிகள் மற்றும் ஜோசியரிலும் அவர்களை பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான். இந்த வாலிபர்களை தனது ராஜ்யத்தில் உயர்ந்த நிலைக்கு உயர்த்தியதில் நேபுகாத் நேச்சாரின் ஞானம் வெளிப்பட்டது. அவர்களது சுயத்தை வெறுத்தலும் தேவனுக்கும் அவரது நியமத்திற்கும் உண்மையாயிருந்ததும் அவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது.

மனசாட்சியுடனும், சுத்தமாகவும், பரிசுத்தமாகவும், நேர்மையாகவும் வாழ நாடுகிறவர்கள் மனிதர்களிடையே உயர்ந்த நிலையை அடைந்தாலும் அடையாவிட்டாலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையிலும் மனதிலும் சரியான பலனை தேவனிடத்தில் பெறுவார்கள். மிகச் சிறப்பான நிலைமை உண்மையான கிறிஸ்தவனுக்குரிய நிலைமையாகும். அவர் வெறும் சபை அங்கத்தினன் மட்டுமல்ல, சபை ஊழியங்களில் ஈடுபடுகிறவர் மாத்திரமல்ல, அவர் தமது முழு சித்தத்தையும் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தவர் ஆகும். இப்படிப்பட்டவரை அப்போஸ்தலர், ''பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின'' என்று விளக்குகிறார். (2 கொரிந்தியர் 5:17)

இப்படிப்பட்டவர்கள், வேதாகமத்திற்கு சென்று அவர்களைக் குறித்த கர்த்தருடைய சித்தம் இன்னதென்று அறிந்து, அந்த சித்தத்திற்கு இசைய தங்களால் முடிந்தவரை வாழ்கிறார்கள். இது அவர்களை எதை சாப்பிட .வேண்டும், எதை குடிக்க வேண்டும், எங்கே போக வேண்டும், எதைச் செய்ய வேண்டும் எதை படிக்க வேண்டும், எப்படிப்பட்ட சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டும், இன்னும் அவர்கள் எதை சிந்திக்க வேண்டும் என்று ஒழுங்குபடுத்துகிறது.

இந்த வகுப்பாருக்குரிய ஒவ்வொன்றும் தெய்வீக சித்தத்திற்கு கீழ்ப்பட்டது. உலகின் அனைத்து ஜனங்களிலும் இந்த வகுப்பார் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற நல்ல காரணமிருக்கிறது. அவர்கள் தற்கால வாழ்வுக்குரிய வாக்குத்தத்தத்தை மட்டும் பெறாமல் வரக்கூடிய வாழ்வில் கனம், மகிமை, சாகாமையையும் பெறுகிறார்கள். மகிமையான சபையின் அங்கமாகவும், மேசியாவின் ஆயிர வருடத்தில் மனுக்குலத்தை ஆசீர்வதிக்கிற அதன் மகா வேலையிலும் பங்கு பெறுகிறவர்களாயிருந்து இதைப் பெறுகிறார்கள்.

### மதுவிலக்குப் பற்றி ஒரு ஆளுனரின் பார்வை

“அநேக மதிப்புக்குரிய ஜனங்களால் மதுமயக்கம் தரும் பானங்கள் அனுபவிக்கப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை. அவர்கள் சில இலக்கிய, சில சமூக காரியங்களில் ஈடுபட்டிருக்கும் போதும் நல்ல ஐக்கியத்துக்காகவும் சந்தோஷத்துக்காகவும் அதை பயன்படுத்துகிறார்கள். இதை சிலர் மிதமாக உடனடியாக தீங்கு வராதபடி பயன்படுத்துகிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவர்கள் அதை பயன்படுத்துவது அபாயகரமானது என்கிற எனது வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள். மது இல்லாமல் நல்ல நேரங்களும் நல்ல ஐக்கியமும் இருக்க முடியும். ஒரு இளைய தோழரைப்பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. ஏனெனில் அவன் அவைகளை பயன்படுத்துவதில்லை; ஆனால் மாறாக, ஒரு தொழிலதிபராக இருந்தாலும் சரி, தொழிற்சாலை தலைவராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு அந்த பழக்கம் இருந்தாலும், மது பழக்கம் உள்ள வாலிபர்களை வேலைக்கு எடுப்பதில்லை.

“ஒவ்வொரு மருத்துவரும் தற்காலத்தில் குடிப்பழக்கத்தை கண்டிக்கிறார். ஒவ்வொரு முதலாளியும் ஒரு தொழிலாளி மதுவை பயன்படுத்துவதைக் கவனிக்கிறார். உங்களுக்கு ஒரு சுத்தமான தலை ஒரு பலமுள்ள இருதயம், சுத்தமான மனசாட்சி, ஆரோக்கியமான சரீரம் வேண்டுமென்றால், பணம் உங்கள் சட்டைப்பையில் இருக்க வேண்டுமென்றால், நீங்கள் நேராக நின்று நான் மதுவிலிருந்து விலகியிருக்கப் போகிறேன் என்று கூறி விசுவாசத்தைக் கடைபிடிக்க வேண்டும். மது பழக்கத்திற்கு அடிமையாவதைக் காட்டிலும் கெட்ட பழக்கம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் வேறெதுவும் இருக்கிறதா? சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் இருங்கள். உங்கள் மூளையை தெளிவாகவும் உங்கள் நிலையை சமநிலையாகவும் உங்கள் சுயமரியாதையை உறுதியாகவும் உங்கள் வாழ்க்கை பிரயோஜனமாக இருக்கும்படியாகவும், வைத்து கொள்ளுங்கள். நல்ல பேச்சுக்காகவோ உணர்ச்சி கருத்துக்காகவோ அல்ல. எதுவும் உங்களுக்கு நம்பக்கூடியதாக இல்லாதிருந்தால், அனுபவம் உங்களை நம்பச் செய்யும். அந்த அனுபவம் கூட காலம் கடந்ததாக பிரயோஜனம் இல்லாததாகவே இருக்கும். என்னை நானே பார்த்துக் கொள்ள நான் சுயகட்டுப்பாடு உடையவனாக இருக்கிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். தவறு செய்யத் தூண்டப்பட்டாலும் மதுபானத்தில் மேல் ஆசையை தூண்ட ஆரம்பித்தாலும், உங்கள் சுயகட்டுப்பாடு தொடர்குண்டு துப்பாக்கிக்கு எதிராக வைத்திருக்கிற ஒட்டுப்பலகையை போலவே இருக்கும்.”

### ரசல் சேஜ் எப்படி அறிவுரை கூறினார்

ஒரு பல்கலைக்கழக கிளப் (Club) கூட்டத்தில் ஒரு உறுப்பினர் தனது சகதோழர்களிடம் சொல்லிய கதை:–

“நியூயார்க்கில் எனது ஆரம்ப நாட்கள் வெற்றிகரமானதாக இல்லை. நிலைமையை சமாளிக்க தீர்மானித்து மாகாணத்தின் மேல் பகுதியிலிருந்து கீழ் பகுதிக்கு வந்தேன். ஆனால் நகர வாழ்க்கையின் கொஞ்ச கால அனுபவத்தில் மிகவும் மனம் தளர்ந்து போனேன். நல்ல வேலை கிடைக்க வில்லை, குமாஸ்தா **(Clerk)** வேலை கிடைத்தது. என்னைப் போன்று வேலை செய்கிறவர்கள் அனைவரும் நம்பிக்கையில்லாமல் காணப்பட்டார்கள். இருபத்தி ஐந்து வயதில் வாரத்திற்கு நான்கு டாலர் மட்டுமே சம்பாதித்தேன். என்னுடைய வங்கி கணக்கில் ஒரு சென்ட் கூட இல்லை.

“ஒரு நாள் எனது எதிர்காலத்தைப் பற்றி அச்சத்துடன் வெறுப்படைந்து, ரசல் சேஜ் என்பவரை பார்க்கச் சென்றேன். சேஜ் நாட்டின் எனது பகுதியிலிருந்து வந்தவர். எனது அப்பாவை நன்கு அறிந்தவர். நான் சொன்னதையெல்லாம் மிகவும் அக்கறையுடன் கேட்டார். நீ குடிப்பாயா என்று அவர் என்னிடம் கேட்டார்.

“ஆம் ஐயா, மிதமாக குடிப்பேன் என்றேன். மிகவும் மிதமாகத்தான் குடிப்பேன்.

“நல்லது ஒரு வருடம் அதை நிறுத்து. அதன் பிறகு என்னை வந்து பார் என்று திரு சேஜ் கூறினார்.

“நான் ஒரு வருடமளவும் குடியை நிறுத்தினேன். அதன் கடைசியில் நான் அந்த கோடீஸ்வரரை சந்திக்க சென்றேன். அவர் என்னை ஞாபகம் வைத்திருந்தார். அவர் கொஞ்சநேரம் பேசினார். பிறகு அவர் கேட்டார் ‘சூதாட்டத்தில் ஈடுபடுவாயா என்று கேட்டார். ‘ஆம் சிலசமயம் செய்வேன்’ என்று கூறினேன்.

“நல்லது ஒரு வருடம் அதை விட்டுவிட்டு, என்னை வந்து பார்” என்றார்.

“ஆகையால் நான் சூதாட்டத்தை நிறுத்தி விட்டு, ஒரு வருடம் கழித்து மூன்றாவது தடவையாக திருவாளர் சேஜ் அலுவலகத்திற்குச் சென்றேன். எனது காரியங்களைப் பற்றி விவாதித்தார். பிறகு “நீ புகை பிடிப்பாயா” என்று கேட்டார்.

“நான், ஆமாம் ஐயா,” என்று கூறினேன்.

“புகைப் பிடிப்பதை நிறுத்திவிட்டு, ஒரு வருடம் கழித்து என்னை வந்து பார்,” என்று கூறினார்.

பேசுபவர் சிரித்தார். கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் பொறுமையிழந்து, நீங்கள், திரும்பிபோன பிறகு என்ன நடந்தது? என்று கேட்டார். நான் திரும்ப போகவேயில்லை என்று பேச்சாளர் மின்னும் கண்களோடு கூறினார். ஏனெனில் திருவாளர் சேஜ் கூறியதுபோல, குடி, சூதாட்டம் மற்றும் புகை பிடித்தல் ஆகியவற்றை நிறுத்திய பிறகு, ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கும் அளவுக்கு நல்ல ஒரு தொகையை சேர்த்திருந்தேன். அது உண்மை, அதிகமான பணத்தை, வியாபாரம் ஆரம்பிக்கும் அளவுக்கு நான் சேர்த்திருந்தேன். அந்த விவேகி, ஞானவான் நான் அறியாமலே வெற்றிப் பாதையில் என்னை வைத்தார்.”

## R 5797 (R4785) God’s Pity for the Heathen

# புறஜாதியினருக்கு தேவனுடைய இரக்கம்

*யோனா 3:5-4:11*

*“ஆகையால், நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்.”* *மத்தேயு 28:19*

யோனா பெரிய மீனின் வயிற்றில் இருந்து பெற்ற அனுபவங்களை நாத்திகவாதிகள் நீண்ட காலமாக நம்ப மறுக்கிறார்கள். அநேக பிரசங்கிகள் கூட யோனாவின் அனுபவங்கள் எல்லாம் பேதைகளுக்குத் தான் ஏற்புடையது, ஞானிகளுக்கு அல்ல என்று விமர்சிக்கிறார்கள். மகா போதகர் யோனா மற்றும் பெரிய மீனின் வயிற்றில் அவரது அனுபவங்களையும் குறிப்பிடுகிறார். வேத வாக்கியங்களை நம்புகிறவர்கள் தங்களது விசுவாசத்திற்கு நல்ல ஆதாரத்திற்கு இதைத் தவிர வேறு எதையும் தேட மாட்டார்கள். யோனாவின் சரித்திரத்திற்கு ஒரு குறிப்பிட்ட இணை இல்லாமலில்லை. ஒரு மாலுமி கப்பலுக்கு வெளியே எப்படி ஒரு பெரிய கந்தக திமிங்கிலத்தால் விழுங்கப்பட்டு, பல மணி நேரத்திற்கு பிறகு தப்பித்த கதையை நியூயார்க் பத்திரிக்கைகளில் ஒன்று விரிவாக எழுதியிருந்தது. அந்த மாலுமியின் தோல், திமிங்கிலத்தின் வயிற்றிலுள்ள ஜீரணநீரினால் சிவந்துபோக பண்ணப்பட்டிருந்து.

யோனாவின் கதை மட்டும் தான் நமக்கு தெரிந்தவகையில் மூன்று இரவும் மூன்று பகலும் மீனின் வயிற்றில் கழிந்த ஒன்றாக இருக்கிறது. உண்மைதான், பெரும்பாலான திமிங்கிலத்தின் தொண்டை ஒரு மனிதனை விழுங்குகிற அளவுக்கு மிகவும் சிறியதாக காணப்படுகிறது. அவைகள் மீள்சக்தி **(Plastic)** உடையவைகள் என்பதை நாம் நினைவுகூருகிறோம். மகா கந்தக திமிங்கிலம் பயங்கரமான பெரியதாக ஒரு சிறிய படகை (ஒரு மனிதனைக் காட்டிலும் மிகப்பெரியது) விழுங்கக் கூடிய அளவுக்கும் கொஞ்சமாக வளையும் தன்மையுடையதாகவும் இருக்கும், மேலும் தேவன் ஒரு பெரிய மீனை தயார்பண்ணினார் என்று நமக்கு வேதாகமம் விசேஷமாக கூறுகிறது. சர்வ வல்லவரின் வல்லமையை சரியாக அறிந்தவர்கள், தேவன் உடனடியாக ஒரு விசேஷித்த மீனை தயார்பண்ணுவதையோ, அல்லது யோனாவின் மார்க்கத்தை முன்னறிந்து ஏற்கனவே ஒரு மீனை தயார் பண்ணியிருந்ததையோ கேள்வி கேட்கமாட்டார்கள். யோனாவின் இந்த அனுபவம், இயேசு பூமியின் வயிற்றில் இருந்ததற்கு நிழலாக இருந்தது, நமது கர்த்தரும் கூட யோனாவைப் போல மரணச் சிறையிலிருந்து விடுதலையாக்கப்பட்டார்.

### நினிவே பட்டணத்தாருக்கு போதித்தல்

நமக்கான ஒரு விசேஷித்த பாடம் யோனா நினிவே ஜனங்களுக்கு போதித்ததோடு இணைக்கப்பட்டுள்ளது. நினிவே எருசலேம் எல்லைக்குப் புறம்பான ஒரு பெரிய பட்டணமாக இருந்தது. ஆகையால் அது தேவ கிருபையற்றதாக இருந்தது, ஏனெனில் நியாயப் பிரமாணத்தை கொடுத்ததிலிருந்து சிலுவை மரணத்திற்கு மூன்றரை வருடம் வரை யூதர்களுக்கு மட்டுமே தேவனுடைய கிருபை நியாயப்பிரமாணத்திற்கு கீழாக விசேஷித்த விதமாக இருந்தது. இஸ்ரயேலின் விசேஷித்த கிருபையின் காலத்தின் முடிவில் நூற்றுக்கதிபதியாகிய கொர்நேலியு என்ற புறஜாதியான் முதன் முதலில் தேவ கிருபையை பெற்றது நிரூபணமாக இருக்கிறது.

சோதோமியர்கள், நினிவேயர்கள் மற்றும் அமலேக்கியர்கள் விஷயத்தில், அவர்களது மீறுதல்கள் நினைவுக்கு வந்திருந்தது, இனி அவர்கள் வாழ்வது அநீதியாயிருக்கும். பாவம் பெருகாதிருக்க அவர்களை மரணத்தில் அறுப்புண்டு போகப்பண்ணுவதே ஒரே வழி என்பதே தேவ கட்டளையாக இருந்தது. இன்னும் தேவன் தீமையை அனுப்பதிப்பதற்கான ஒரு எல்லை வரையறுக்கப்பட்டிருந்து என்ற பொதுவான பாடம் கூட மனுக்குலத்திற்கு கொடுக்கபட்டது. ஜனங்கள் தண்டிக்கப்பட்டு, கவிழ்த்துப்போடப்பட்டது அவர்கள் மீட்பை அனுபவிக்க மாட்டார்கள் என்பதையோ மீட்பு, அவர்களுக்கு அளிக்கப்படாது என்பதையோ குறிக்காது. மற்ற ஆதாமின் பிள்ளைகளைப் போல இவர்களும் ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட “சாகவே சாவாய்,” “ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல” என்ற தண்டனைக்குள்ளாக இருந்தார்கள். தற்கால வாழ்க்கைத் தொடர மட்டுமே அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. எதிர்கால வாழ்வுக்காக மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து வருவது தடுக்கப்படவில்லை. அவர்களோ அல்லது மற்றவர்களோ இன்னும் மீட்கப்படவில்லை.

ஆகையால், இயேசுவின் மீட்பின் வேலையால் உறுதிபண்ணப்பட்ட எதிர்கால வாழ்வு, ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்ட திரளான ஜனங்களுக்கு எந்தவிதத்திலும் குறுக்கிட படவில்லை. உண்மையிலே யூதர்கள் கூட இன்னும் இரட்சிக்கப்படவில்லை. நியாயப் பிரமாணத்தின் கீழாக வாக்களிக்கப்பட்ட இரட்சிப்பு அவர்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்கவில்லை. பவுல் கூறுகிறதாவது: “எந்த மனுஷனும் நியாயப்பிரமானத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாகிறதில்லை.” யூதர்கள் நியாயப்பிரமாணத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருந்தால் கிறிஸ்து வந்தது வீணாயிருக்கும்.

யூதருக்கு வாக்களிக்கப்பட்ட ஜீவனானது, அவர்களும், மொத்தத்தில் அனைவரும் தெய்வீக சட்டத்தின் கீழாக தெய்வீக உதவியின்றி பெற இயலாது என்பதை நிரூபிக்கவே யாகும். மீட்பர் மற்றும் கல்வாரியில் அவரது பலி, இன்னும் அவரது ஆயிரவருட மேசியாவின் ராஜ்யத்தில் புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராக உலகத்திற்காக அவரது வேலை ஆகியவை இல்லாமல் ஜீவனை பெற இயலாது. இதற்கு இசைவாக அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “கிறிஸ்து சுவிசேஷத்தினாலே ஜீவனையும் அழியாமையையும் வெளியரங்கமாக்கினார்.” மேலும், “நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை.” மேலும் “இந்த பெரிதான இரட்சிப்பானது நம் கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டது.” (எபிரேயர் 2:3)

## நினிவே ஜனங்கள் மனஸ்தாபப்பட்டனர்

நாற்பது நாட்களுக்குள்ளாக தேவன் நினிவேயை அழிப்பார் என்பதே யோனாவின் போதனையாக இருந்தது. ஆனால் அதன் ஜனங்கள் யோனாவின் போதனையால் தங்கள் பாவ மார்க்கத்திலிருந்து திரும்பி மனம் வருந்தி தெய்வீக மன்னிப்புக்காக மன்றாடினார்கள். ராஜா அறிவித்ததாவது: “மனுஷரும், மிருகங்களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும் மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும் மனுஷரும் மிருகங்களும் இரட்டிப்பினால் மூடிக்கொண்டு தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம் தம் பொல்லாத வழியையும் தம்தம் கையிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள்.” கர்த்தர் நினிவே ஜனங்களின் வேண்டுதலைக் கேட்டு, அவர்களது மனஸ்தாபத்தை ஏற்றுக் கொண்டு இன்னும் கொஞ்சகாலம் தங்கள் வாழ்க்கையை தொடர அனுமதித்தார்.

தேவன் ஆரம்பம் முதல் முடிவுவரை எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்பதை நாம் அறிவோம். அதாவது நினிவே ஜனங்கள் மனஸ்தாபப்படுவார்கள் என்பதையும் யோனாவின் போதனையின்படி தான் அவர்களை நாற்பது நாட்களுக்குள் அழிக்க போவதில்லை என்பதையும் அவர் அறிந்திருந்தார். பெரிய பட்டணமாகிய நினிவேயை முற்றிலுமாக அழித்தார். ஆனால் சொல்லர்த்தமான நாற்பது நாட்களுக்குள் அல்ல தீர்க்க தரிசனமான ஒரு நாள் என்பது ஒரு வருடத்தைக் குறிப்பதால், நாற்பது நாள் என்பது நாற்பது வருடத்தைக் குறிக்கிறது. தேவன் இதை குறிப்பிட்டிருப்பார்.

சர்வ வல்லவர் தமது அபூரண மானிட ஊழியர்களைக் காட்டிலும் எவ்வளவு அதிகமாக மனதுருக்கம் உடையவர் என்பதை இந்த பாடம் நமக்கு காண்பிக்கிறது. நினிவே ஜனங்கள் மனப்பூர்வமாக மனம் வருந்தி தங்களது பாவத்தை விட்டு விலகினதால் தேவன் சந்தோஷமடைந்தார். அவர்களது பூமிக்குரிய வாழ்வை நீட்டிக்க அவர் அனுமதித்தார். ஆனால் யோனாவுக்கு அது மிகவும் விசனமாயிருந்தது. அவரது கூற்று தேவன் தன்னை முட்டாளாக்கிவிட்டார் என்பது. தேவன் இந்த பெரிய பட்டணம் நாற்பது நாட்களுக்குள் அழிக்கப்படும் என்று என்னிடம் சொன்னார். நானும் போதித்தேன். ஆனால் அவர் அதை நாற்பது நாட்களுக்குள் அழிக்கமாட்டார் என்பதை அறிந்திருந்திருப்பார். தேவன் என்மேல் அவகீர்த்தியை கொண்டு வந்தார். நான் இப்போது கள்ளத்தீர்க்கதரிசி என அவர்கள் கருதும்படியாக இருக்கிறேன்.

யோனா நினிவே ஜனங்களையும் அவர்களது நன்மையைக் காட்டிலும் தன்னைக் குறித்தும் தனது நற்பெயரைக் குறித்துமே அதிக அக்கறை கொண்டவராயிருந்தார். தேவனுடைய ஊழியர்கள் அப்படியிருக்கக் கூடாது! சுயம் என்பது கடைசியாக இருக்க வேண்டும். இது குறித்து மகா அப்போஸ்தலர் பவுல் அறிவுறுத்துவதாவது: “அன்பு தற்பொழிவை நாடாது.” மேலும், “கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடக்கவில்லை.” 1 கொரிந்தியர் 13:5; ரோமர் 15:3

## தேவன் தீமைக்காக மனஸ்தாபப்பட்டார்

தேவன் ஆரம்ப முதல் முடிவுவரை எல்லாவற்றையும் அறிந்தவராயிருந்தால், ஏன் அவர் மனஸ்தாபப்பட்டு தமது மனதை மாற்ற வேண்டும் என்கிற கேள்வி சிலரது மனதில் எழுகிறது. மனஸ்தாபப்படுதல் என்ற வார்த்தை பொதுவாக காணப்படுவதைக் காட்டிலும் பரந்த பொருளுடையது. மனுக்குலமானது அதை நோக்கத்தை மாற்றுவது என்ற பொருளில் மட்டுமே பயன்படுத்துகிறது. ஆனால் நவீன அகராதிகள் அதற்கு செயலை மாற்றுதல், அல்லது நோக்கத்தை மாற்றுதல் அல்லது இரண்டையும் மாற்றுதல் என்று பொருள் கூறுகிறது. தேவனுடைய நோக்கங்கள் மாறாதது, அதற்காக அவர் மனம் வருந்தமாட்டார். ஆனால் அவரது நடவடிக்கைகளை மாற்றுவார்.

இஸ்ரயேல் ஜனங்கள் நூற்றாண்டுகளாக அவரது தயவை பெற்ற ஜனங்களாக இருந்தனர்; அவர்களுடனான தொடர்பை முறித்து மாற்றிக் கொண்டார். ஆனால் தேவன் இஸ்ரயேலைக்குறித்த தமது திட்டத்தை எப்பொழுதும் மாற்றவில்லை. அவர்கள் இயேசுவை மறுதளிப்பார்கள் என்பதையும், அவரது கிருபையிலிருந்து அவர்கள் தள்ளப்படுவார்கள் என்பதையும், அவர்கள் எப்படி பிறகு தங்கள் சொந்த நாட்டில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்பதையும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியாகவும், ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் மேசியா தமது ராஜ்யத்தில் வரும்போது இஸ்ரயேலர் மன்னிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதையும் முன்னறிந்து முன்னறிவித்தார்.

அற்பமான ஒரு ஆமணக்கு செடியின் மேல் யோனா கொண்டிருந்த இரக்கத்தையும் நினிவே ஜனங்கள் மேல் அவர் அதில் குறைவுபட்டிருந்ததையும் பற்றிய ஒரு பாடத்தை தேவன் அவருக்குத் கற்றுக் கொடுத்தார். இதேபோல் அநேக போதகர்களும் மற்றவர்களும் கூட இருக்கிறார்கள். அவர்கள் பூக்களின்மேலும் பறவைகள்மேலும், தாழ்ந்த மிருகங்கள் மேலும் குழந்தைகள்மேலும் இரக்கமுடையவர்களாகவும் தற்காலத்தில் துயரத்தில் இருக்கிற மனுக்குலத்தில் மேல் கொஞ்சம் இரக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள், தேவன் நினிவேயர்களையும், சோதோமியர்களையும், அமலேக்கியர்களையும், இன்னும் மற்றவர்களையும் போல காலா காலமும் அக்கினியில் தகிக்க எண்ணங் கொண்டிருக்கவில்லை என்று கூறினால் இப்படிப்பட்டவர்கள் சில சமயங்களில் கோபங்கொள்கிறார்கள். உலகத்திற்கு பொதுவாக அனைவருக்கும் மனித பூரணத்தையும் உலகளாவிய ஏதேன் மற்றும் நித்திய ஜீவனை அடையும்படி சந்தர்ப்பம் கொடுப்பது தேவனுடைய கிருபையான திட்டமாக இருக்கிறது என்பது வெளியரங்கமாகும். சுவிசேஷயுகம் முழுவதும் தேர்வு செய்யப்பட்டு தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட சபையும், அதன் தலையாகிய இயேசுவும் இணைந்த மகா பெரிய மேசியாவுக்கு செவிகொடுத்து கீழ்ப்படிகிறவர்களுக்கு நித்திய ஜீவன் கொடுக்கப்படும்.

சுவிசேஷ யுகத்தில் யூதர்களுக்கு மட்டுமே சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாது, அனைத்து ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படும். இந்த போதகம் சகல ஜாதியினரையும் மனமாற்றம் செய்வதற்காக அல்ல, அதுபோல செய்யப்படவும் இல்லை. அனைத்து ஜாதிகளிலிருந்து ஒரு சில பரிசுத்தமுள்ளவர்களை சேர்ப்பதே அதன் நோக்கமாகும். இது சீக்கிரத்தில் நிறைவேறும்.

## R 5799 Why God has Permitted Satan's Lying Deceptions

# சாத்தானின் பொய் சொல்லும் வஞ்சகங்களை தேவன் ஏன் அனுமதிக்கிறார்

*"உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்பு கூருகிறீரகளோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்." உபாகமம் 13:3*

தேவனுடைய பிள்ளைகள் இந்த வசனம் ஆழ்ந்த அர்த்தமும் கருத்தும் உள்ளது என்பதை உணருகிறார்கள். இது ஆழமாகவும் அடிக்கடியும் கவனிக்கப்படுகிறதில்லை. சோதிக்கிறார் என்ற வார்த்தை பரீட்சை என்ற பொருளில் விளக்குகிறது. இந்த வார்த்தைகள் இஸ்ரயேலுக்கு சொல்லப்பட்டது. அவர்கள் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகவும், அவருடன் ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்குள் நுழைந்தவர்களாகவும் இருந்தனர். புறஜாதிகளால் சூழப்பட்டிருந்த அவர்கள் அவர்களிடமிருந்து விலகி இருக்கவும் அவருடைய ஜனங்களாகவும் ஒரு பரிசுத்த ஜாதியாகவும் யேகோவாவின் பொக்கிஷமாகவும் இருக்க ஒப்புக் கொண்டவர்கள். அவரும் அவர்களுடைய தேவனாயிருக்க ஒப்புக்கொண்டிருந்தார். அவர்கள் தேவனுடைய அனைத்து கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய ஒப்புக் கொண்டது போல தேவனும் அவர்களை பரீட்சை பார்ப்பது சரியானதாக இருந்தது. அவர் புறஜாதிகளை சோதிக்கவில்லை. ஏனெனில் அவர்கள் தேவனோடு எந்தவித உடன்படிக்கையும் செய்யவில்லை; அவருடைய ஊழியர்களாக அவருடன் உறவிலும் இல்லை. ஆனால் இஸ்ரயேல் சோதிக்கப்பட வேண்டும். அவர்களது சோதனையில் குணலட்சணம் இந்த வசனத்தில் காட்டப்பட்டுள்ளது. இந்த சோதனை பொய்யான போதகர்களையும் பொய்யான தீர்க்கதரிசிகளையும் அவர்களுக்குள்ளே அனுமதிக்கப்படுவதின் மூலம் நிறைவேற்றப்படும்.

தீர்க்கதரிசி என்ற வார்த்தை அதன் பரந்த பொருளில் போதிப்பவரையும் முன் அறிவிப்பவரையும் குறிக்கிறது என்பதை நாம் நினைவுகூர வேண்டியவர்களாயிருக்கிறோம். பிற தெய்வங்களை ஆராதனை செய்ய தவறாக வழிநடத்தும்படி இஸ்ரயேலருக்குள் இருக்கும்படி சிலரை கர்த்தர் அனுமதித்தார். இது தேவன் கள்ள போதகர்களை அழிக்க முடியாததினால் அல்ல, ஆனால், உண்மையான தேவனாகிய யேகோவாவின் ஊழியத்திற்காக தங்களை அர்ப்பணம் பண்ணினதாக வெளிப்படுத்தியுள்ள ஜனங்களை சோதிப்பதற்காக ஆகும். இந்த கள்ள தீர்க்கதரிசிகள் தங்களுடைய அதிசயத்தக்க வல்லமையினால் அடையாளங்களையும், விளக்கங்களையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கொடுக்க முடிந்தது. ஆனால் யேகோவா மற்றும் அவரது ஊழியத்திலிருந்து விலகும்படி வழிநடத்துகிறவர்களின் போதகங்களையும் கிரியைகளையும் கவனிக்க வேண்டாம் என்று தேவனால் முன்னரே இஸ்ரயேலர்கள் எச்சரிக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட அடையாளங்களும் அதிசயங்களும் இன்றும் புறஜாதி மதங்களில் அடிக்கடி நடந்து கொண்டிருக்கிறது. இவைகள் சாத்தானாலும் அவனது பொல்லாத ஆவியின் சேனைகளாலும் எழுப்பப்படுகிறவைகள். மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு நடந்ததெல்லாம் நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டுள்ளது. (1 கொரிந்தியர் 10:11) நமது தலைப்பு வசனம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு மிகவும் சரியாக பொருத்தக்கூடியதாக இருக்கிறது. பேய்களின் பிரபுவும் அவனது விழுந்துபோன தூதர்களும் மகா அதிசயமான கிரியைகளை நடப்பிக்கும் வல்லமைகளையும், எதிர்காலத்தில் நடக்கப் போகிறவைகளை சில சமயங்களில் துல்லியமாக முன்னறிவிக்கும் திறமைகளையும் உடையவர்களாயிருக்கிறார்கள். விழுந்துபோன தூதர்கள் பூமிக்குரிய விவகாரங்களில் இப்படிப்பட்ட அறிவும் மனதை அறிகிற வல்லமையும் உடையவர்களாயிருக்கிறார்கள். இவைஎல்லாம் கடந்த காலங்களில் உண்மையாக இருந்திருக்கிறது.

யாரோ ஒருவருடைய மரணத்தை சம்பவிப்பதற்கு முன்னரே கூறுவது போன்றவைகளுக்கு ஆவியின் மீடியம் **(Spirit Mediums)** பயன்படுத்தப்பட்டது ஒரு சோதனையாக இருந்தது. உதாரணத்திற்கு பிரசித்தி பெற்ற சிலரது மரணத்தை அறிவிப்பார்கள். "சுவீடனின் ராஜா இன்று இறந்து விட்டார்" என்று அவர்கள் கூறுவார்கள். இந்த செய்தியை உண்மையா என அறிந்துகொள்ள அங்கே ஒரு கப்பல் வந்தால் தான் முடியும். ஏனெனில் அந்த காலங்களில், தந்தி, கேபிள் போன்றவைகள் வருவதற்கு முன்பு செய்திகள் மிக தாமதமாக வந்தன. பிறகு ஓரிரு மாதங்களில் செய்திகள் வரும். மீடியங்கள் மூலமாக முன் சொல்லப்பட்ட செய்தி உண்மையென்று நிரூபணமாகும். சில சமயங்களில் அந்த மீடியம் அறிவித்த சரியான நேரத்தில் அந்த மரணம் நேர்ந்திருக்கும். மீடியங்கள் தற்காலத்தில் குறைவாக கிரியை நடப்பிக்கின்றன. ஏனெனில் உலகெங்கிலும் செய்தியை மிக விரைவில் அனுப்ப நவீன கண்டுப்பிடிப்புகள் வந்துவிட்டன. ஆனால் அவர்கள் உண்மைகளை கண்டுபிடிக்கவும் அவைகளை அவர்களுக்கு அனுப்பவும் மற்ற அநேக உபாயங்களை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

### தேவனுடைய வார்த்தை அவரது பிள்ளைகளுக்கு வழிகாட்டி

விழுந்துபோன தூதர்கள் அற்புத வேலைகளிலும் சுகமளிப்பதிலும் பயன்படுத்துகிற வல்லமை குறித்து நமக்கு அறிவிக்கப்படவில்லை. ஆனால் அது தேவனால் நடப்பிக்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம். தேவன் தமது வசனங்களை நமக்கு கொடுத்திருக்கிறார் என்பதையும் அவருடைய வசனத்தின் மூலம் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதையும் கர்த்தருடைய பிள்ளைகள் நினைவுகூர வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இந்த மறைவான சக்திகளுடன் இணைந்து எதையும் செய்வதற்கு எதிராக தேவன் நம்மை எச்சரித்திருப்பதே போதுமானது. இப்படிப்பட்ட எச்சரிப்புகளெல்லாம் கீழ்க்கண்ட வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. லேவியராகமம் 19:31; 20:6, 27; உபாகமம் 18:10-12; 2 ராஜாக்கள் 17:17; 24:23; 1 நாளாகமம் 10:13; 2 நாளாகமம் 33:6; ஏசாயா 8:10; எரேமியா 27:9,10 ; 20:8,9 லூக்கா 8:26-35; அப்போஸ்தலர் 16:16-18.

நாம் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, தேவனையும் அவரது திட்டங்களையும் நாம் அறிந்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த கள்ள தீர்க்கதரிசிகளில் யாரும் தேவனைவிட்டு நம்மை பிரிக்கவோ, நம் மேல் அவர்கள் செல்வாக்கு பெறவோ நாம் அனுமதிக்கக் கூடாது. இந்த தீமையான செல்வாக்கு பூமியிலே இருக்கும்படி கர்த்தர் அனுமதிக்கிறார். ஏன்? அவர் இப்பொழுது தமது குமாரனுக்கு மணவாட்டியை தெரிந்து கொண்டிருக்கிறார்; அவர் இந்த வகுப்பாரின் அங்கங்கள் சோதிக்கப்பட விரும்புகிறார். கள்ள போதகர்களை அனுமதிப்பதின் மூலமே அவர் தம்முடைய பிள்ளைகள் எந்த அளவுக்கு தமக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் கள்ள போதகர்களையும் அவர்கள் பின்பற்றுவார்களா என்பதையும் தமக்கும் தூதர்களுக்கும் மெய்ப்பித்து காட்ட முடியும். கர்த்தரை கண்டுபிடிக்க முடியாத இடத்திலும் அவர்மேல் நம்பிக்கை வைத்து அவருக்கு கீழ்ப்படிகிறவர்களைத் தான் முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக அவர் பெற்றிருப்பார். அவரது வசனத்தையும், அவரது சாட்சியத்தையும் பெற்றிருக்கும் வரை அதுவே போதுமானதாக இருக்கிறது.

இந்த அனைத்து கள்ள போதகர்களின் மனோபாவம் என்னவென்றால், உண்மையான ஒரே தேவனை விலக்கிவிட்டு பேய்களை ஆராதிக்க வழி நடத்துவது. அமெரிக்காவிலும் கூட அநேகமான தேவர்கள் இருக்கிறார்கள். ஒரு பிராமணன் வாழ்வதற்கு இந்த நாட்டிற்கு வரும்பொழுது இந்தியாவில் உள்ளதைப் போல இங்கேயும் பிரம்மாவை வணங்குகிறான். பிரம்ம ஞானிகளும் உண்மையான தேவனுடைய இடத்தை எடுத்துக்கொள்ளும்படி விக்கிரகங்களையும் சிலைகளையும் செய்கிறார்கள். வளர்ந்து வரும் நாகரீகத்தினால் கள்ளத் தேவர்கள் எப்பொழுதுமே களிமண் அல்லது வெங்கலம் அல்லது மரத்தினால் இருப்பதில்லை. அதற்கு பதிலாக இன்றைக்கு விக்கிரக உருவங்களெல்லாம் அச்சு மையினால் செய்யப்படுகின்றன. நாகரீகமடைந்த புறஜாதி ராஜ்யங்களில் வேதாகம தேவனுக்கு மாறுப்பட்ட தேவர்களை ஆராதிக்கிறார்கள்.

நாகரீகமடைந்த நாடுகளில் தற்காலத்தில் அநேகர் உண்மையான தேவனை ஆராதிப்பதில்லை. சிலர் நன்மையின் கொள்கையில் ஒரு தத்துவ ரீதியான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஜனங்கள் கொள்கையே அவர்களது தேவன். அவர்கள் தீமை அல்லது தவறின் கொள்கையை கொண்டிருக்கிறார்கள். இந்த தீமையின் கொள்கை அவர்களுக்கு பிசாசு. இது மட்டுமே பிசாசு என்று அங்கீகரிக்கிறார்கள். இந்த ஜனங்கள் நன்மை செய்ய வேண்டும் என்று நாடுகிறார்கள். ஆனால் அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

தற்காலத்தில் அதிகமதிகமாக இந்த தப்பறையான தேவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். கடவுளைப்பற்றிய புதிய சிந்தனை இருக்கிறது. வேதத்திற்கு விரோதமான இந்த புதிய தத்துவங்கள் எல்லாம் பிசாசிடமிருந்து வந்தது என்று நாங்கள் நம்புகிறோம். இந்த பிசாசுகள் வஞ்சிப்பதற்கு இந்த நேரத்தில் அதிக வல்லமையை பெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த காலத்தில் கள்ள உபதேசங்களை போதித்தவர்கள் தாங்கள் போதித்தது கள்ள உபதேசங்கள் என்பதை அறிந்திருந்தார்களா என்பதை நாம் அறியோம். மேலும் அவர்களை உயர்த்தினவர்கள் அவர்கள் கள்ள போதகர்கள் என்பதை அறியாதிருந்தனர். அதுபோல இப்பொழுதும் இருக்கிறது. கடந்த கால மற்றும் நவீனகால கள்ள உபதேச போதகர்கள், வேத வாக்கியங்களை மறுதளிக்கிற அல்லது வெறுமையாக்குகிற இப்படிப்பட்ட அனைத்து சபை வகுப்பார்களும் வஞ்சிக்கப்படுகிறார்கள் தற்போது உலகத்தில் இருக்கிற குழப்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் தீய ஆவிகள்தான் பொறுப்பாகின்றன.

அப்போஸ்தலர் பவுல், சுவிசேஷயுக முடிவு பற்றி குறிப்பிடுகையில், கள்ள உபதேசங்கள் பெருகும் என்று அறிவிக்கிறார். அநேகர் ஏன் வஞ்சிக்கப்பட்டு தவறாக வழி நடத்துகின்றனர் என்று அவர் நமக்கு சொல்கிறார். அவர் கூறுகிறதாவது. “இரட்சிக்கப்படத்தக்தாக சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற் போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை (ஆதி 3:4) விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.” (2 தெசலோனிக்கேயர் 2:10–12) தேவனுடனும் அவரது சத்தியத்துடனும் தொடர்புக்கு வந்தவர்கள் காந்த முள் துருவத்தினால் ஈர்க்கப்படுவதுபோல சத்தியத்தினால் ஈர்க்கப்படுவார்கள் என்பதே இங்கே அறிவிப்பாக காணப்படுகிறது. தேவன் தாமே பெரிய துருவமாக இருக்கிறார். அவரால் உண்மையிலேயே இழுக்கப்பட்டவர்கள் அவரை விட்டு விலகுவது கடினமானதாக இருக்கும். ஒரு காந்த முள்ளை தற்காலிகமாக துருவத்திலிருந்து திசைமாற்றினாலும் அது மறுபடியும் சரியான திசைக்கு திரும்பி வரும். இதுபோல தேவனுடைய பிள்ளைகளிடத்திலும் இருக்கிறது. சத்தியத்தோடு ஒரு கவர்ச்சியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அதனால் அவர்கள் செல்வாக்கு பெற்றிருக்கிறார்கள். அதன் மூலம் காந்தமடைந்து இழுக்கப்படுகிறார்கள்.

இவர்கள் ஒரு சபை பிரிவின் கட்டடத்தின் மேல் பிரியம் வைத்தோ அல்லது ஒரு சபை பிரிவுக்காக பணத்தை சேர்க்க விரும்பியோ அல்லது தங்களது சொந்த யோசனையின் மேல் பிரியம் வைத்தோ சத்தியத்தை பெற்றுக் கொள்ளாமல் சத்தியத்தின் மேல் பிரியம் வைத்தே அதை பெற்றுக் கொண்டார்கள். சத்தியத்தின் மேல் பிரியம் வைத்து அதைப் பெற்றுக் கொண்டவர்களை அதிலிருந்து மனம்மாற தேவன் அனுமதிக்கமாட்டார். ஆனால் வேறு ஏதாவது காரணத்தினாலோ நோக்கத்தினாலோ, சத்தியத்தை பெற்றுக் கொண்டவர்களிடம் கொடிய வஞ்சகத்தை அனுப்புவார். அவர் அனுப்பிய இந்த கொடிய வஞ்சகம் எல்லா இடத்திலும் பரவும்படி செய்வார். அவர் நாமம் தரிக்கப்பட்டு அவரது பிரமாணங்களை தங்கள் மேல் சுமத்திக் கொண்டவர்களது உண்மையான மனோபாவத்தை மெய்ப்பித்து காண்பிக்கும்படி செய்வார். இப்படியாக விசுவாச இருதயமுள்ளவர்கள் வெளிப்படுத்தப்படுவார்கள். இவர்களைக் குறித்து அவர் அறிவிப்பதாவது: “என் சம்பத்தை சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்.” (மல்கியா 3:17)

## விழுந்துபோன தூதர்கள் விசேஷமாக இன்றைக்கு செயல்படுகிறார்கள்

விழுந்துபோன ஆவிகள் உலகமுழுதும் மனுக்குலத்தை

வஞ்சித்து சிக்கவைப்பதில் வெற்றியடைந்திருக்கிறார்கள். இந்த ஆவிகள் இந்த யுக அறுவடை காலத்தில் அவர்களது தாக்குதல் முறைகளிலும் வஞ்சிப்பதிலும் விசேஷித்த விதமாக தீவிரமாக இருக்கிறார்கள் என்று கர்த்தர் தமது ஜனங்களுக்கு அறிவுரை அளிக்கிறார். "ஆவியானவர் வெளிப்படையாய் சொல்லுகிறபடி, பிற்காலங்களில் மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினால் சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்." (1 தீமோத்தேயு 4:1) வஞ்சிக்கிற ஆவிகளின் இந்த மாயம் ஒளியின் தூதர்களின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு புதிய வெளிச்சத்தை கொண்டு வருகிறோம் என்று காண்பிக்கிறதிலும் அடங்கியிருக்கிறது (2 கொரியந்தியர் 11:13, 14)

நாகரீகமில்லாதவர் மத்தியில் இந்த ஆவிகள் ஏன் புதிய வெளிச்சத்தை கொண்டு வர முயற்சி செய்யவில்லை என்பதற்கு எந்த காரணமும் இல்லை; ஏனெனில் இவர்கள் முன்னரே வஞ்சகம் மற்றும் வஞ்சக போதனைகளிலும் இருக்கிறார்கள். கர்த்தருடைய மகா நாளின் இந்த ஆரம்பத்தில் அறிவு மற்றும் நாகரீகம் அடைந்தவர்களிடையே சிந்தனைகளும் கண்டுபிடிப்புகளும் எழுந்து கொண்டிருக்கிறது. சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களின் சேனைகளின் குருடாக்கும் செல்வாக்கும் இருந்தும் இவர்களில் அநேகர் விழித்தெழுந்திருக்கிறார்கள். சாத்தான் இங்கே சுறுசுறுப்பாக வைக்கப்பட்டிருக்கிறான்.

தற்கால மானிடர்களிடையே பழங்கால மந்திர வித்தையும் மந்திரங்களும் பிரயோஜனமில்லை. கடந்த காலத்தை போல இவைகளால் ஏமாற்றக் கூடாதபடி அவர்களது அறிவு மிகவும் ஜாக்கிரதையுடன் இருக்கிறது. ஆவியுலக வஞ்சகங்களாகிய மனித சக்தியை மீறிய, அசையச் செய்தல், எழுதுதல், ஆவி-புகைப்படம், குரல்கள் முதலான அனைத்தும் மனிதனது சாகாமை மற்றும் பூமியில் உள்ளவர்கள் மரித்தவர்களோடு தொடர்பு கொள்ளுதல் முதலானவைகளை நிரூபிக்கச் செய்யும் செயல்களாகும். இவைகளால் அறிவுள்ள ஜனங்களையும் விசேஷமாக சாத்தான் இடறவிழச் செய்ய மிகவும் ஆவலாயிருக்கும் தேவனுடைய அர்ப்பணம் செய்தவர்களையும் வஞ்சிக்க விரும்புவது முட்டாள்தனமானதும் மூடத்தனமானதாகவும் இருக்கும். இதனிமித்தம் மாற்றங்களில் முன்னேற்றம்-புதிய "ஒளியின் வஸ்திரங்கள்" தொடர்ந்து பாவனை செய்யப்படுகின்றன, "காலத்திற்கேற்ற உணவாக" தேவனால் தமது பரிசுத்தவான்களுக்கு அனுப்பப்படுகிற தற்கால சத்தியம், "தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக" செய்யப்படுகிறவைகளை சரியானபடி எதிர்கொள்ளுகிறது.

கிறிஸ்து மூலமாக தேவனிடத்தில் விசுவாசம் வைத்தவர்களை வஞ்சிப்பதும் தேவனை விட்டு விலகச் செய்வதும் கூடாத காரியம். இவர்கள் கிறிஸ்துவின் மகா இரட்சிப்பின் பலியின் புண்ணியத்தில் நம்பிக்கை வைக்கிறவர்கள். இவர்களது இருதயம் கர்த்தர் மற்றும் அவரது ஊழியத்தில் முற்றிலுமாக அர்ப்பணம் செய்திருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் "தோல்வியடையவே மாட்டார்கள்". ஆனால் மற்றவர்கள் அனைவரும் விசுவாசிகளிலிருந்து பிரிக்கப்படுவார்கள். ஆகையால் தேவன் தமது திட்டங்களை நடைமுறைப்படுத்த சாத்தானின் கோபத்தை பயன்படுத்துகிறார். அதாவது கொடிய வஞ்சகத்தை அனுப்புகிறார். அது தற்போது, தேவனுடைய வசனங்களில் வழங்கப்பட்டிருக்கிற தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களை அணியாமலும், தங்களது "விசுவாசத்தை இயேசுகிறிஸ்து என்னும் பாறையின் மேல் உறுதிப்படுத்தாமலும் இருப்பவர்களை தவறாக வழிநடத்திக் கொண்டிருக்கிறது. தவறுகளினால் இழுக்கப்பட்டு, அதில் சந்தோஷம் காண்கிறவர்கள் இப்படியாக வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பரலோக ராஜ்யத்தில் ஒரு பங்குக்கு தகுதியற்றவர்கள் என்று நீதியாகவும், சரியாகவும் கண்டிக்கப்பட்டு விளங்கப்பண்ணப்படுவார்கள்.

## கிறிஸ்தவ விஞ்ஞானம் மற்றும் பிரம்மஞானம்

சத்துருவானவனின் பண்படுத்தப்பட்ட மற்றும் பிரபலமான கருவிகள் மற்றும் அனைத்து இருளின் சக்திகளுமே கிறிஸ்தவ விஞ்ஞானமும் பிரம்ம ஞானமுமாக இருக்கின்றன. இவைகள் பரிணாமம் மற்றும் வேதாகமத்திற்கு எதிரான கோட்பாடுகள் போன்றவைகளோடு சபைக்கு வெளியே இருப்பவைகள். ஆனால் உள்ளே இருப்பவை உயர் விமர்சனம் **(Higher Criticism),** முற்போக்கான சிந்தனைகள் முதலானவைகள். இவைகளெல்லாம் பலவீனமுள்ள பேர்சபைகளை சுக்கு நூறாக கிழித்துக் கொண்டிருக்கின்றன. இந்த கொள்கைகள் அனைத்தும் "பொய்க்கு பிதாவானவனின்" மாறுபட்ட அடையாளத்தைப் பெற்றிருக்கின்றன. (யோவான் 8:44) இவைகளெல்லாம் ஒட்டுமொத்தமாக சேர்ந்து மனிதன் சாகாமையுடையவன் என்று அறிவிக்கின்றன. உயர் விமர்சனம், ஆதாம் ஏவாள் ஏதேனில் விழுந்துபோன கதை, யோனாவும் பெரிய மீனும் கதை உட்பட பெரும்பாலான தேவனுடைய வசனங்களையும் அற்புதங்களையும் கிழவிகளின் கட்டுக்கதை என்று கூறுகிறது.

கிறிஸ்தவ விஞ்ஞானம் என்பது "திருமதி.மேரி பேக்கர் எட்டி **(Mrs. Mary Baker Eddy)** என்பவரது தகாத கருத்துக்கள். அவரது கருத்துக்கள் எல்லாம் இல்லாத விஞ்ஞான மூலகங்கள். அதோடு சேர்க்கப்பட்ட "கிறிஸ்தவ" என்ற வார்த்தை அவரது கொள்கைகளுக்கு அவரால் கொடுக்கப்பட்ட பெயர். அந்த கொள்கைகள் எல்லாம் தேவனுடைய பிள்ளைகளை வஞ்சிக்கவும் அழிக்கவும் சாத்தானால் கணக்கிட்டு கொடுக்கப்பட்டவைகள். கிறிஸ்தவ விஞ்ஞானிகளுக்கு கிறிஸ்து இரட்சகரல்ல, இரட்சகர் தேவையில்லை. கிறிஸ்து ஒரு நல்ல மனிதர் மட்டுமே, ஒரு கிறிஸ்தவ விஞ்ஞானி. அவர் புது விஞ்ஞானத்தை கொடுத்தார், ஆனால் அதை பூரணமாக புரிந்துகொள்ளவில்லை. பிற்காலத்தில் இது பூரணமாக, முழுமையாக போஸ்டனைச் **(Boston)** சேர்ந்த மறைந்த திருமதி.எட்டி **(Eddy)** அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. "எல்லாம் ஜீவனுடனிருக்கிறது மரணமேயில்லை என்பதே அவர்களது சுலோகம்." "நீங்கள் சாகவே சாவதில்லை" என்ற சாத்தானின் ஏதேனில் ஆரம்பிக்கப்பட்ட பொய்யையே அவர்கள் இவ்விதமாக அறிவிக்கிறார்கள். "சாத்தான் பொய்யன் என்றும் அவன் சத்தியத்தில் நிலைநிற்பதில்லை" என்றும் அவன் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்து அல்ல, மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்து தான் என்று இயேசு அறிவித்தார்.

யுனிவர்சலிசம் (Universalism) என்ற அமைப்பினர், கிறிஸ்து

மனிதனுக்கு மீட்கும் பொருளாக மரிக்கவில்லை என்றும் கல்லறையின் வல்லமையை மேற்கொள்ளவில்லை என்றும் கூறி வேதத்தை மறுக்கிறார்கள். இயேசு மற்ற மனிதர்களைப் போல நல்ல மனிதர், ஞானமான போதகர், ஆனால் எந்தவிதத்திலும் அவர் இரட்சகர் இல்லை என்று வலியுறுத்திக் கூறுகிறார்கள். சிலர் மனிதன் குரங்கிலிருந்து அல்லது தலைப்பிரட்டையிலிருந்து (தவளை குஞ்சு) அல்லது உயிரணுவிலிருந்து (Protoplasm) பரிமாணமடைந்தான் என்று கூறுகிறார்கள்; மனிதன் மிகவும் மோசமான சாயலில் இருந்தான்; அவன் தேவ சாயலே அல்ல; அவன் "அரைவேக்காடு ரொட்டியைப்" போலிருந்தான். எனவே மனுக்குலம் படிப்படியாக பரிணாம வளர்ச்சியடைந்து பூரணத்திற்கு வந்தது என்று அனைவரும் ஒருமித்து நம்புகிறார்கள். அனைவரும் சாத்தானின், "நீங்கள் சாவவே சாவதில்லை" என்கிற ஒரே மொழியையே உறுதிப்படுத்துகிறார்கள். மரணம் என்பது பரிணாமத்தின் ஒரு நிலை. மனிதனே அவனது சொந்த இரட்சகர்.

பிறகு நாம் பிரம்ம ஞானத்திற்கு வருகிறோம். இந்த கொள்கையினரில் இயற்கை ஆர்வலர்களும் நாகரீகமுள்ளவர்களும் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் குருடரும், நிர்வாணிகளும், பசியுள்ளவர்களுமாக பேர் சபையில் இருக்கிறார்கள். (வெளி 3:17) இது மிகவும் புதியதான, மிகவும் மெருகேற்றப்பட்ட மத கருத்துகளை உடையதாக இருக்கிறது. இது இந்து மதத்தின் மையக் கருத்தின் மறுமலர்ச்சியாக இருக்கிறது. இது பழங்கால சரித்திரம் மூலம் அறியப்பட்டது. இதன் பெரும்பாலான காரியங்களில் மத்திய காலத்தின் "ஜெர்மனிய மறைபொருள்கள்" என்று அழைக்கப்பட்ட வஞ்சகங்களாக இருக்கிறது. இந்த பிரம்ம ஞானம் அனைத்தும் தேவனுடையது என்று முழுமையாகவும் அபத்தமாகவும் கூறுகிறது. எல்லைக்குட்பட்ட அனைத்தும் எல்லையற்ற ஜீவியாகிய தேவனிடமிருந்து வெளிப்பட்டவைகள். அதாவது தூதர்கள், மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மற்றும் பிசாசுகள் போன்றவை. இவை தெய்வத்தின் பகுதிகளாக இருக்கிறபடியால் அழியாமையுடைவர்களாக (சாத்தான் கூறினதுபோல) சாகவே சாகாதவர்களாக இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

சாக்ரட்டீஸ், பிளாட்டோ (இவர்கள் பிரம்ம ஞானத்தின் சில கொள்கைகளை மறுத்தாலும், தங்களது கொள்கைகளை இப்பொழுது அவர்கள் பெறுகிறது போல தேவனிடமிருந்து நேரடியாகவும் உள்ளுணர்வு மூலமும் பெற்றுக் கொண்டதாக கூறிக் கொள்கின்றனர்) போன்ற கிரேக்க தத்துவ ஞானிகளின் தத்துவங்களுக்கு இசைவாக பிரம்ம ஞானத்தினர் மனிதன் என்றென்றைக்குமாக எதிர்காலத்தில் மாத்திரமல்ல முற்காலத்திலும் என்றென்றைக்குமாக வாழ்ந்தான் என்று கூறிக்கொள்கின்றனர். பலவீன மனதுடையவர்களுக்கு ஒரு கேள்வி எழுகிறது. "எப்பொழுதும் பார்த்திராத ஒரு இடத்தை முதல் தடவையாக பார்க்கும் பொழுது பழக்கப்பட்ட இடம் போல் விநோதமாக காணப்படுகிறே ஏன்? இந்த இடங்களெல்லாம் நீ இந்த பிறவிக்கு வரும் முன் முந்தைய பிறவியில் பார்த்த இடங்கள்". சாத்தான் சில சமயங்களில் மயக்கநிலை கற்பனையில் ஒரு கனவை காண உதவி செய்வான். பிரம்மஞானம், மரணம் என்பது மரணமல்ல, ஆனால் ஒரு புது பிறப்பு என்று கூறுகிறது. ஒவ்வொருவரும் மீண்டும் மீண்டும் மறுபிறவியை போதுமான வளர்ச்சியடைந்து தெய்வீக சுபாவம் அடையும் வரை பெறுவார்கள். அதன் பிறகு நித்தியமாக தேவனுக்குள் திரும்ப செல்வார்கள்.

### மனித ஞானம் தேவனுக்கு பைத்தியம்

பிரம்ம ஞானத்தின் கொள்கைகள் மத சாஸ்திரத்தையோ அல்லது தர்க்க சாஸ்திரத்தையோ அடிப்படையாக கொண்டதல்ல. அதன் சட்ட நிபுணர்கள் ஞானத்தின் மதம் என்ற அர்த்தத்தில் பிரம்ம ஞானம் என்ற வார்த்தையை கொடுத்தனர். அதன் ஞானம் தெய்வீகம் என்றும், இதன் பலனால் தேவனிடம் நேரடியான தொடர்பும் உள்ளுணர்வும் பெறலாம் என்றும் கூறுகின்றனர். அதினால் தர்க்க சாஸ்திர காரணங்களையும், வேத வாக்கியங்கள் போன்ற வெளிப்படுத்தல்களையும் உண்மையான ஞானத்திற்கு தடையாக இருக்கிறது என்று மறுக்கிறார்கள். தேவனுடைய வெளிப்படுத்தலுக்கு மாற்றாக தங்களது அபூரண மனதின் வீணான கற்பனைகளை எடுத்துக் கொள்கின்றனர்–தியாகத்தின் மூலமாக. இப்படிப்பட்டவர்களை பற்றித்தான், வேதாகமம் "அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பைத்தியக்காரராயினர்" என்று கூறுகிறது. (ரோமர் 1:21,22)

பிரம்மஞானம் வெளிப்படுத்தப்பட்ட அனைத்து மதங்களையும் விலக்கி, அனைத்து போதனைகளையும் அசட்டை பண்ணுகிறார்கள். அவர்கள் தங்களை காரணமும் விளைவும் கொண்ட மதம் என கூறிக்கொள்கின்றனர். விரைவாகவோ அல்லது காலதாமதமாகவோ தீமை செய்தவர்களுக்கு தண்டனையும் நன்மை செய்தவர்களுக்கு வெகுமதியும் வரும் என்று கூறுகின்றனர். அவர்கள் கிறிஸ்துவையும், மோசேயையும் சாக்ரட்டீஸ், பிளாட்டோ, கன்பூசியஸ், முகமது போன்றோர்களுடன் சேர்த்து உலக போதகர்கள் என்று கூறுகின்றனர். தங்களது கொள்கைகளுக்கு ஆதரவாக பைபிள், குரான் ஆகியவற்றிலிருந்து மேற்கோள் காட்ட தயாராயிருப்பார்கள். ஆனால் அவர்கள் எந்த ஒரு புத்தகத்தையோ, எந்த ஒரு மனிதனையோ தெய்வீக அதிகாரம் பெற்றவர்களாக கூறமாட்டார்கள். எந்த ஒரு உயர்ந்த பண்பிற்கும், தரும சிந்தனையோடு கூடிய திட்டத்திற்கும் ஆதரவாளராக கூறிக்கொண்டு பிரபலமானவர்கள் மூலமாக பிரம்மஞானத்தினராக போதிக்க விருப்பம் உடையவர்களாக இருப்பார்கள். மனிதரிடையே செய்யப்படுகிற, காணப்படுகிற தானதருமம் செய்தல், நற்காரியங்கள் செய்தல் போன்றவைகளில் ஆதரவாயிருப்பார்கள்.

ஆகையால் பிரம்ம ஞானம், பெரும்பாலான உலக ஞானிகளின் மனோபாவத்திற்கு மிகவும் சிறந்ததாக கூறப்படுகிறது.அவர்கள் தங்களது அபூரணத்தையோ அல்லது தேவனுடைய கிறிஸ்துவுக்குள்ளான இரக்கத்தையோ பாராட்டுவதில்லை. அவர்கள் கூறுகிறதாவது: "எனக்காக எனது கடனை யாரும் அடைக்க வேண்டியதில்லை. நான் ஏதாவது பாவம் செய்தால் அதன் தண்டனையை நானே ஏற்றுக் கொள்ள எதிர்பார்க்கிறேன்". இப்படிப்பட்ட மனோபாவம் அனைத்தும் பிரம்ம ஞானத்திற்காக கனிந்ததாயிருக்கிறது உண்மையிலேயே முழு கிறிஸ்தவ உலகமும் தங்களது முன்னிருந்த குழப்பமான விசுவாச கொள்கைகளை விட்டுவிட்டு, பிரம்ம ஞானத்தோடு பிரயாணிக்க தயாராயிருக்கிறார்கள். நன்மை செய்வதன் மூலம்

அதன் மாலுமி இளைப்பாறும் இடத்திற்கு –அப்படி ஒரு இடம் இருந்தால் – அழைத்துச் செல்வார். ஏனெனில் அப்படி ஒன்று இருப்பதில் அநேகருக்கு சந்தேகம் இருக்கிறது. ஐயகோ! எந்த அளவிற்கு தேவனுடைய வார்த்தையிலும் அவரது திட்டத்திலும் குழப்பம்!. எப்படி பேர் சபைகளின் இந்த குழப்பம் கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து மகா பெரிய விசுவாச துரோகத்திற்கு வழி வகுத்திருக்கிறது. வேறொரு சுவிசேஷத்திற்கு வழி வகுக்கிறது இது உண்மையிலேயே சுவிசேஷம் அல்ல. (கலாத்தியர் 1:6–9)

நிச்சயமாக, இந்த வஞ்சகங்களில் எதுவும் ''ஏற்ற காலத்திற்கோ'' இப்பொழுதோ இதற்கு பின்போ கிறிஸ்துவின் சிலுவை போதனைக்கு எல்லாருக்கும் மீட்கும் பொருள் – அல்லது அதன் சாட்சியங்களுக்கு பயன்படாது. 1 தீமோத்தேயு 2:4–6 ஐப்பார்க்கவும். இங்கே அப்போஸ்தலர் கூறுகிறதாவது:

''நம்முடைய இரட்சகராகிய தேவன், எல்லா மனுஷரும் (முழு உலகையும் பிடித்துக் கொண்டிருக்கிற ஆதாமினால் வந்த மரணத்திலிருந்து) இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன் ஒருவரே; தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே; எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே. இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது.'' இந்த பிரம்ம ஞானக் கோட்பாடுகளில் வேதாகம போதனையாகிய மீட்கும் பொருளோ அதன் பலனால் எதிர்காலத்தில் வரப்போகிற இளைப்பாறுதலோ காணப்படவில்லை.

## சாத்தானின் பொய்யே கள்ள உபதேசங்களுக்கு அடிப்படை

நமது நாட்களின் முன்னுரைக்கப்பட்ட கொடிய வஞ்சகங்களில் எதுவும் பலம் வாய்ந்ததும் சக்தியுள்ளதும் அல்ல, மாறாக, அவைகள் மிகவும் பலவீனமுள்ளவைகள். ஆனால் அவைகள் அநேகரை வஞ்சிப்பதற்கு சக்திவாய்ந்தாக இருக்கிறது. ஏனெனில் நமது நாட்களில் கிறிஸ்தவர்களென்று கூறிக் கொள்பவர்களில் பெரும்பாலோர் கிறிஸ்துவின் உண்மையான சீஷராகவில்லை. அவர்கள் வெறும் களைகள், போலியான கிறிஸ்தவர்கள். அவர்களில் யார் உண்மையான கிறிஸ்தவர்கள்? சிலர் மட்டுமே பால் மறந்தவர்கள். (ஏசாயா 28:9) எபிரேயர் 5:12–14) பேர்சபையில் சிலர் மட்டுமே தங்களை சுற்றிப்போத்தும் துணியிலிருந்து மனதின்படியும் ஆவியின்படியும் விலகியிருக்கிறார்கள். சிலர் மட்டுமே தேவ வசனமாகிய பாலை அருந்தி வளர்ந்திருக்கிறார்கள். அதன் மூலமாக, கிறிஸ்துவுக்குள் அபிவிருத்தி அடையும்படி தற்கால சத்தியமாகிய ''பலமுள்ள ஆகாரத்தை'' பயன்படுத்தவும் அறிந்திருக்கிறார்கள். ஆகையால் ஆவியுலகம், ஸ்வீடன் போர்கியனிசம் **(Sweden borgianism)** போன்றவைகளால் பாதிக்கப்படாதவர்கள் தற்கால சாத்தானின் தந்திரமும் வஞ்சகமுமாகிய கிறிஸ்தவ விஞ்ஞானம் மற்றும் பிரம்மஞானம் போன்றவைகளுக்குள் கூட்டிச் சேர்க்கப்பட்டுக்கொண்டு வருகிறார்கள்.

இந்த வஞ்சங்களின் பலம், கிறிஸ்தவ ஜனங்களால் நீண்ட நாட்களாக சத்தியத்தோடு கலந்துவிட்டிருந்த பெரும் தப்பறைகளில் இருக்கிறது. இது வேத வாக்கியங்களில் முன்னுரைக்கப்பட்டபடி அப்போஸ்தலர்கால சபையின் பரிசுத்தமான விசுவாசத்திலிருந்து விசுவாச துரோகத்தினாலேயாகும் பொதுவான நம்பிக்கையான நீங்கள் சாகவே சாவதில்லை என்கிற முதல் பொய்யைக் காட்டிலும், இந்த தப்பறைகளில் எதுவும் இந்த வஞ்சிக்கிற, அழிக்கிற இன்றைய கோட்பாடுகளுக்கு மனதையும் இருதயத்தையும் திறக்கிற எவ்வித திட்டமும் இல்லை. இந்த பொய்யின் பொதுவான ஒப்பதலினால், ஜீவனையும் அழியாமையையும் பற்றிய வேத போதனையை புரிந்து கொள்வதில் தோல்வியே ஏற்பட்டது. இந்த ஜீவனும் அழியாமையும் கர்த்தராகிய இயேசுவின் மீட்கும் பொருளின் பலியினால் பாவத்திலிருந்து இரட்சிப்பு என்கிற அவரது சுவிசேஷத்தினால் வெளியரங்கமாக்கப்பட்டது.

ஒவ்வொரு வஞ்சகமும் சில சத்தியத்தை தடை செய்து மறைக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் அவரது அனைத்து சர்வாயுதவர்க்கங்களும் தேவைப்படுகிற காலத்திற்கு இப்பொழுதும் நாம் வந்திருக்கிறோம். ''தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களையும்,'' அணியாதவர் இந்த ''தீங்கு நாளில்'' பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும் படியாக பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்தில், விழுந்து போவது நிச்சயம், ''நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்க வேண்டும்.'' யார் நிலைநிற்க முடியும்? அருமையான வாக்குத்தத்தங்கள் மற்றும் தேவனுடைய வார்த்தையின் முக்கியமான போதனைகளில் தங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் தங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுகிறவர்களைத் தவிர வேறு யாரும் நிலைநிற்க முடியாது.

## முற்றிலும் ஜெயங்கொண்டவர்களைத் தவிர அனைவரும் வஞ்சிக்கப்படக் கூடியவர்களாயிருக்கிறார்கள்

தப்பறையான போதனைகளை ஆதரிப்பவர்கள் ஆச்சரியத்தக்கவிதமாக மிகவும் விழிப்புடனும் சுறுசுறுப்பாகவும் இருக்கிறார்கள். இன்னும் சிந்தனை மிகவும் சுறுசுறுப்பாகவும், சுதந்திரம் உரிமையாக இருக்கிற அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இன்னும் விழிப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் இந்த வஞ்சகங்களை நவீன, முன்னேறிய வெளிச்சமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எந்த அளவுக்கு அவர்கள் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்பது அநேகருக்கு தெளிவாக இல்லை. ஏனெனில் அவர்களது வெற்றி இரைக்காக வேட்டையாடுதில் இன்னும் இருக்கிறது. அதை ஆதரிப்பவர்கள் ஒவ்வொரு சபை பிரிவின் ஒவ்வொரு கூட்டத்திலும் **(Congregation)** இருக்கிறார்கள். இன்னும் விசேஷமாக அதிக நாகரீகம் அடைந்தவர்களில் இருக்கிறார்கள். "ஒளியின் தூதனுடைய" முக்கிய அம்சங்கள் எப்பொழுதாவது நிராகரிக்கப்படுகிறது. பேர் சபைகள் இந்த தப்பறையான போதனைகளால் ஊடுருவப்பட்டு புளித்துப் போயிருக்கின்றன.

''உன் பக்கததில் ஆயிரம் பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்து போகிற'' தீர்க்கதரிசனங்கள் இப்போது நம் கண் முன்னே நிறைவேறுகின்றது. (சங்கீதம் 91:–3–14) உலகப் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்துவின்

ஈடுபலியாகிய மீட்கும் பொருளின் போதனையே பரீட்சையாக இருக்கிறது. ''சிலுவை'' தான் நமது இரட்சகரின் முதல் வருகையைப் போலயே தடுக்கலின் கல்லாக இப்பொழுதும் இருக்கிறது. வேதாகமத்தின், கிறிஸ்தவ மதத்தின் இந்த முக்கிய அடிப்படையான போதனையில் ஏறக்குறைய மற்ற அனைவரும் விழுந்துவிட்டார்கள். இயேசு குறிப்பிட்ட சில காரியங்களை பின்பற்றுவதற்கு ஒரு உதாரணமாக மட்டுமே இருக்கிறார் என்று பெரும்பாலானவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அவரை மீட்கும் பொருளாகவோ, நமது மீட்பராகவோ ஏற்றுக் கொள்ளவில்லை.

வேத வாக்கியங்களின் போதனைகளிலிருந்து ''தேவனுடைய முற்றிலும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைத்'' தவிர ஏறக்குறை மற்ற அனைவருமே வஞ்சகங்கள் மற்றும் நமது நாளில் உலகத்தனத்தில் இடறி விழுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். மத்தேயு 24:24-27; 2 பேதுரு 2:3-11) தேவனுடைய அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்தைக் கவனிப்பதின் மூலமாக புரிந்து கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படாத அனைவரும் ''ஒளியின் வேஷத்தைத்'' தரித்துக் கொண்டு தீய சக்தியினால் ஏமாற்றும் பேச்சுகள் மற்றும் அற்புத சுமளிக்கும் கிரியைகளினால் வஞ்சிக்கப்படுவார்கள்.

அநேக அற்புதமான வேலைகளை செய்வது சாத்தான் மற்றும் அவனது தீய சேனைகளின் பழைமையான தந்திரங்களில் ஒன்றாக இருக்கிறது. தீமை ஆளுகை செய்யும் போது (எபிரேயர் 2:14) சாத்தானின் கட்டுப்பாட்டின் கீழ் மரணமும் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக இருந்தால், அவனது தற்கால அபாயத்தில் அவனது தோல்வி சமீபமாயிருப்பதினால் அவன் தனது கிரியைகளை ஏன் மாற்றிக் கொள்ளவில்லை? சுகப்படுத்தும் வேலைகளை செய்து, இதன்மூலம் அவனது தவறுகளையும வஞ்சகங்களையும் இறுகப்பற்றிக் கொண்டு, கிறிஸ்துவின் நாளில், விடிகிற ஆயிர வருடயுக நாளின் வெளிச்சத்திலே படிப்படியாக கண்களை திறக்கப் பெற்றுக் கொண்டிருக்கிறவர்களை ஏன் திரும்பக் கட்ட வேண்டும்?

இந்த கொள்கைகளை அவன் கடைபிடித்து வருகிறான், இன்னும் அதிகமாகவும் செய்வான் என்று நாம் நம்புகிறோம். இதற்கு பொருத்தமாக நமது ஆண்டவரின் கேள்வி இருக்கிறது. சாத்தானை சாத்தானே துரத்தினால் தனக்கு விரோதமாக தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே. அப்படிச் செய்தால் அவன் இராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? மேலும் ''சாத்தான் தனக்குத்தானே விரோதமாக எழும்பிப்பிரிந்திருந்தால், அவன் நிலைநிற்கமாட்டாமல், அழிந்து போவானே.'' (மத்தேயு 12:26; மாற்கு 3:26) ஆகையால் சாத்தானுடைய ராஜ்யம் இப்பொழுது நீக்கப்பட போகிறது. அவனது முகவர்கள் மூலமாக விரும்பி, ஆனால் அறியாமல் தவறாக கிறிஸ்துவின் நாமத்தில் செய்துவருகிற அநேக அதிசயமான வேலைகளை ஆதரித்து வருகிறான்.

## உண்மையுள்ளவர்கள் அதிசீக்கிரத்தில் பிரகாசிப்பார்கள்

இந்த பல்வேறு வஞ்சகங்கள், பிசாசுகளின் போதனைகள் தேவனுடைய ராஜ்யத்திலிருந்து நீக்கப்படுகின்றன. ''சகல இடறல்களையுமு அக்கிரமஞ்செய்கிறவர்களையும்'' (இது ஒரு பெருங்கூட்டமாக அமையும்) நீக்குவார். இப்பொழுது ஆரம்பிக்கப்பட இருக்கிற மகா மேசியாவின் ராஜ்யத்தில், ராஜ்யத்தைப் பெற்று கிறிஸ்துவின் உடன் சுதந்திராகப் போகிறவர்களாகிய உண்மையுள்ளவர்கள் மட்டுமே நிலை நிற்பார்கள். (எபேசியர் 6:11-13) இந்த பிரித்தெடுத்தல் முடிவடையும்போது (இது தற்போது கிட்டதட்ட முடிவடைகிறது என்று நம்புகிறோம்) மகா ஆபத்தின் நாளின் அக்கினி தற்கால ஏற்பாடுகளை சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் மதம் அழித்துப்போகும். அப்பொழுது மதத்திலுள்ள அனைத்து தப்பறைகளும் வஞ்சகங்களும் முற்றிலும் நித்தியமாக அழிந்து போகும். பிறகு கர்த்தரின் உண்மையுள்ள சிறு மந்தை, சாகாமையையும் தெய்வீக சுபாவத்தையும் பெற்று கிறிஸ்துவின் சிங்காசனத்தில் உட்கார்ந்து ''அவர்களது பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப்போல பிரகாசிப்பார்கள்.'' (வெளி 3:21) அவர்கள் அனைத்து அறியாமையையும் நீக்கி, மரித்த மற்றும் உயிரோடிருக்கும் பூமியின் சகல வம்சங்களையும் உயர்த்துவதற்கு இந்த உலகில் ஆயிரம் வருடம் அரசாளுவார்கள்.

உறுதியான தீர்க்கதரிசன வசனத்தில் வைக்கப்பட்டுள்ளதுபோல் சத்தியத்தை அறிந்த அனைவரும் அதை பரப்புவதில் சுறுசுறுப்பாக இருப்பார்களாக, காலம் மிகவும் குறைவாக இருக்கிறது! பொது இடத்தில் உங்களால் போதிக்க முடியவில்லையென்றாலும் தனியாக நீங்கள் சந்திக்கிற அண்டை வீட்டார் மற்றும் நண்பர்களிடம் போதிக்கலாம். தினமும் தொடர்ச்சியான தொடர்பின்மூலம், அச்சடிக்கப்பட்ட தாள் மற்றும் பேனா மூலம் அனைவரும் நிச்சயமாக ஊழியம் செய்யலாம். நமது உதவி தேவைப்படுகிறவர்களுக்கு என்ன உதவியானாலும் நாம் அவர்களுக்கு செய்யலாம். அவர்கள் அதைப்பெறவில்லை என்றால், சத்துருவானவனின் கடைசி கால வஞ்சகங்கள் சில வற்றில் நிச்சயமாக சீக்கிரத்தில் சிக்க வைக்கப்படுவார்கள்.

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ, **C.T.** ரசல் அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,

வெளியிடுபவர்:

சகோ, **R.** செல்வராஜ். சென்னை வேதமாணவர் சபை.
எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.
சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**